திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்.

இதழ் : 8 24—6—55 வெள்ளி : 14 பக்கங்கள் : விலை 3 அணா மலர் : 47

டாக்டர் லோகியாவின் மனக்குழப்பம்

"ஏகஇந்தியா" என்ற லேபிலை ஒட்டிக் கொண்டு இயங்கிவரும் எந்தக் கட்சியாலும் தென்னாட்டின் உண்மையான விடுதலைக்கும் மக்களின் நல்வாழ்வுக்குமான காரியங்களைச் சாதிக்க முடியாது என்பதுடன், சமயம் நேரும்போதெல்லாம் வடநாட்டு ஏகாதிபத்ய உருவில் வளர்ந்துவரும் காங்கிரசுக்கு முட்டுக் கொடுக்கவே அக்கட்சிகளின் நடவடிக்கைகள் பயன் படுத்தப்படும் என்பதை அவ்வப்போது தக்க சான்றுகளுடன் விளக்கி வருகிறது திராவிட முன்னேற்றக் கழகம். இவ்வுண்மையை அனைத்திந்திய கட்சிகளின் தலைவர்கள் ஒப்புக்கொள்ள மறுத்தாலும் சில நேரங்களில் தங்களின் "வீரவைராக்கியத்தை" மறந்து தி. மு. கழகம் கூறும் உண்மைச் சம்பவங்களை வேறு 'பாணி'யில் அத்தலைவர்களே எடுத்துக் கூறுகின்றனர்!

பிரஜா சோஷலிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரான டாக்டர் மனோகர் லோகியா அவர்கள் சென்ற வாரம் பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டி யளித்தபோது அனைத்திந்திய கட்சிகளாக இயங்கிவரும் கம்யூனிஸ்ட், பி. சோ. ஆகியவைகளைப்பற்றி சித்தரித்திருக்கிறார்!

"தெலிங்கானா, ஆந்திரா, வங்கம் ஆகிய இடங்களிலெல்லாம் காங்கிரசை முழு மூச்சாக எதிர்த்து வந்த கம்யூனிஸ்டுகள், இன்று பண்டித நேருவை திடீரெனப் புகழ்பவர்களாக பாராட்டுபவர்களாக ஆகி விட்டனர்; இந்நிலை மிக விசித்திரமானது."

"பி. சோ. கட்சியோ இன்று செயலற்று விட்டது; சட்டசபைகளுக்கு உள்ளும், வெளியும் ஒரு திறமைமிக்க எதிர்க்கட்சியாக இல்லாமல், உபயோக மற்றதாக—ஆற்றலற்றதாகப் போய் விட்டது"

'ஆட்குறைப்பு, வேலையில்லாத் திண்டாட்டம் இவற்றை எதிர்த்து போரிடக்கூட தவறி விட்டனர். எனவே என்னைப் பொறுத்த மட்டில் பி.சோ.கட்சியை திருத்தியமைக்கவோ—இல்லையெனில், தனிக்கட்சி அமைக்கவோ எண்ணுகிறேன்' என்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

டாக்டர் லோகியா — கம்யூனிஸ்ட், பி. சோ. கட்சிகளைப் பற்றி வெளிப்படையாகக் குறிப்பிட்டிருப்பதுபற்றி பாராட்டுகிறோம். ஆனால் அக்கட்சிகளின் போக்கிலேயுள்ள குறைபாடுகளைத் தவிர்க்க தனிக்கட்சி அமைக்க எண்ணுகிறேன் என்று அவர் தெரிவித்திருப்பதில்தான் நாம் சற்று ஐயம் கொள்ள வேண்டியிருக்கிறது. அத்தனிக் கட்சிக்கும் "அனைத்திந்திய லேபிலை"தான் ஒட்டப்படுமா? அல்லது குறிப்பிட்ட ஏதாவதொரு மாநிலத்திற்காவது நடைமுறையில் சுதந்திரத்தைத் தேடித்தரும் கொள்கையில் கவலை செலுத்துமா என்பதே நமது கேள்வி?

ஏனெனில் அனைத்திந்தியா என்ற பேரால் கட்சி அமைத்து எப்பேர்ப்பட்ட சூரர்தான் அதை நடத்திச் சென்றாலும் அவர்கள் சமயம் நேரும்போது வடநாட்டு ஆதிக்கத்திற்கு துதிபாடும் கோணங்கிதனத்தில்தான் சமர்த்தர்களாக யிருக்கமுடியும்!

அனைத்திந்தியாவிலும் எடுத்துக் கொண்டால் இன்று எல்லா மாநிலங்களும் ஒரே அளவில் பலமுள்ளதாகவோ அல்லது அந்தந்த மாநில மக்களுக்கு ஓரளவு வாழ்வாவது ஒழுங்காக கிடைக்கும்படியான வாய்ப்போ அமைந்திருக்கிறதென்று அரசியல் விவரம் அறிந்த எவரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். இந்நிலையில் பின்னடைந்துள்ள மாநில மக்கள் தங்கள் உரிமைகளுக்காக ஆவன செய்யப்படும்போது—அந்த ஆரம்ப வேண்டுகோள் ஆளவந்தார்களால் புறக்கணிக்கப்படுகையில் சற்று தீவிர நடவடிக்கைகளில் இறங்கும்போது, அனைத்திந்திய லேபிலை ஒட்டிக்கொண்டுள்ள கட்சிகள் அந்த உரிமைப் போரைக் கண்டிப்பதும் ஏக இந்தியா என்ற வரட்டுத் தத்துவம் பேசி நாட்டுப் பிரிவினையா அது நாசச் செயலாயிற்றே என்று கூப்பாடு போடுவதும், இன்னும் சொல்லப்போனால், தெரிந்தோ தெரியாமலோ இந்தியப் பேரரசுக்குப் பதிகம்பாடி பல்லக்குத் தூக்கும் வேலையிலும் ஈடுபடுகின்றனர்.

இதுதான் கம்யூனிஸ்ட்—பி. சோ. போன்ற கட்சிகளின் கொள்கையாக கட்சியின் நடவடிக்கைகளாக யிருந்து வருகிறது.

எனவே பிற்படுத்தப்பட்டுள்ள மாநிலங்கள் தலைநிமிர்ந்து வாழ வேண்டுமென்ற நேர்மையான கொள்கைதான் அனைத்திந்தியாவை உண்மையிலேயே ஒன்றுபடுத்த இயலுமே யல்லாது, கொழுத்தவன் மேலும் கொழுக்கவும், தேய்ந்து வருபவன் தனது வாழ்வையே முடித்துக் கொள்ளும் வகையிலும், ஏகஇந்தியா தத்துவம் பேசுவது அரசியல் தெளிவும் அறிவுடைமையுமாகாது என்பதை டாக்டர் மனோகர் லோகியா, கம்யூனிஸ்ட்—பி. சோ கட்சிகளின் இரண்டுங்கெட்டான் நிலையைச் சித்தரிக்கும் இச்சந்தர்ப்பத்திலாவது உணர்வாரென்று நம்புகிறோம்.

அனைத்திந்தியாவிலும் உள்ள மாநிலங்கள் ஒன்றுக்கொன்று குரோதமோ — அல்லது வேறுபாடோ கொள்ளக்கூடாது என்று சிலர் "வேதாந்தம்" பேசலாம்! எப்படி வேறுபாடு கொள்ளாமலிருக்க முடியும்? பிற்படுத்தப்பட்டுள்ள மாநிலங்களிலுள்ள மக்கள் மரக்கட்டைகளாக யிருந்தால் ஒருக்கால் அவ்வுணர்ச்சி இல்லாமலிருக்கலாம்!

பிரிட்டிஷ் ஆட்சியின் போதே—அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு தொழில் துறையிலும் மற்ற வசதிகளிலும் முன்னேற்றமடைந்துள்ள வடநாடு, சுதந்திர ஆட்சியில் முதலாக தன் அளவுக்கு மற்ற மாநிலங்களைக் கைகொடுத்து உயர்த்தியிருந்தால் வேறுபாடு உணர்ச்சிக்கோ அல்லது குரோத மனப்பான்மைக்கோ இடமிருக்காதல்லவா?

அதைவிடுத்து ஏற்கனவே மாடி வீட்டில் வாழ்பவனுக்கு மேலும் நாலைந்து மாடிகளை அமைத்து வீட்டைப் புதுப்பிப்பதும் குடிசையில் வாழ்ந்து வருபவனுக்கு பிய்த்துப்போகும் கீத்தைக்கூட ஒழுங்கு செய்து கொள்ள சக்தியற்றவனைத் தவிக்க வைப்பது போல வடநாட்டை வாழவைப்பதும், தென்னாட்டைத் தேய வைப்பதுமான தாபார் நடத்தினால் இதனை மான ரோஷமுள்ள மக்கள் எப்படி சகித்துக் கொண்டிருக்க முடியும்!

எனவே இன்றைய காங்கிரசாரின் ஆட்சிமுறையில் வளர்ந்து வரும் இந்த ஓரவஞ்சனை தொல்லைகள் ஆகியவைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட வேண்டுமானால், ஒவ்வொரு மாநிலத்திற்கும் முழு அரசியல் உரிமையை அளித்தாக வேண்டும். இதற்குப்

8-ம் பக்கம்

"வறுமை தீர வழி....!"

ஏழைப் பெண்களும் நாட்டியம் ஆடப் பழகிக் கொள்ள வேண்டும் என்று நிதி அமைச்சர் சுப்ரமண்யம், அண்மையில் சென்னை நாட்டிய விழா ஒன்றில் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார். இதனால் ஏழைகளின் வறுமை தீர்ந்து விடும் என்று அந்தராத்மா அபூர்வ யோசனை கூறியிருக்குமோ!

கேள்வி? பதில்.

அஞ்சாநெஞ்சன்

"ஜனசக்தி"யின் கோயபல்ஸ் பிரசாரம்

கம்ப ராமாயணம் ஒரு கையில் கார்ல் மார்க்ஸ் மற்றொரு கையில்

ஆலயம் ஆண்டவனுக்குத் தேவையா ? அர்ச்சனை-ஆராதனைதான் அவனுக்குச் செய்யும் சேவையா?

சர்வதேச கண்ணோட்ட சரக்குக்கும் நெருக்கடியா?

அகிலம் புகழும் திராவிடத்திலே—சிறப்பாக தமிழகத்திலே இன்றைய தினம் மறுமலர்ச்சிக் கருத்துக்களும் பகுத்தறிவுக் கொள்கைகளும் பரவியிருக்கின்றது என்றால் அதற்குக் காரணம் சுயமரியாதை இயக்கமும் திராவிட இயக்கமும்தான் என்பது நாடறிந்த உண்மை. ஆனால் அகிலமெங்கும் எங்கள் கட்சி உண்டு எனக் கூறிக்கொண்டு, திராவிடத்தை மட்டும் விட்டு மற்ற நாடுகளுக்குள் சமாதானத்தை ஏற்படுத்துகிறோம் என பறைசாற்றித் திரியும் சர்வதேசக் கண்ணோட்டக்காரர்களுக்கு இவ்வுண்மை புலப்படுவதில்லை. காரணம் அவர்களின் பார்வையில் அவ்வளவு பழுது ஏற்பட்டிருக்கிறது. ஆகையால்தான் அவர்களது நினைவெல்லாம் திராவிடத்தின் நல்வாழ்வுக்கான செயலாற்றும் தன்மைகளிலிருந்து பறந்து விட்டது!

திராவிட இயக்கம் அரசியல், பொருளாதாரம், சமுதாயம் இம்மூன்று துறைகளிலும் விடுதலை, சமத்துவம், மறுமலர்ச்சி இவைகளுக்காக நீண்டகாலமாக பாடுபட்டு வருகிறது. அதுவுமின்றி சமுதாயத்தில் உள்ள சீர்கேடுகளைக் களைந்தெறிய சுயமரியாதை இயக்கம் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பணியாற்றி வருவதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. நம்மாநிலத்தில் ஆண்டவர்களுக்குப் பணி, அவர்களுக்காக இருக்கும் ஆலயங்களின் பணி, ஆலயங்களில் தின்று கொழுத்து வாழும் அடியார்கள் பணி என்ற பேரால் ஏழை நடுத்தர மக்களது செல்வத்தை சூடம் சாம்பிராணி கொளுத்துவதன் மூலமாக கரியாக்கியும்—மற்ற பிற மூடப்பழக்க வழக்கங்கள் மூலம் அவர்களது 'பொருளாதாரத்தை' சுரண்டுவது 'சமுதாயத்தில்' உள்ள சீர்கேடுதானே யென்று கேட்டால் அதைச் சிந்தித்துப் பார்ப்பதை விடுத்து சீறிப்பாய்கிறது, கம்யூனிஸ்ட் கட்சி!

தமிழகத்தின் ஆலயங்களிலே முடங்கிக் கிடக்கும் செல்வத்தை நாட்டின் பொது நலனுக்கான பிரச்னைகளில் பயன்படுத்தினால் நாடும் வளம்பெறும், மக்களும் நலம் பெறுவர். இத்தகைய மறுமலர்ச்சிக் கருத்துக்களை கூறி மக்களை சீர்திருத்திவரும் தி. மு. கழகத்தைப் பார்த்து நீ கருத்து முதல்வாதி, நீ பொருள் முதல்வாதியல்ல, உன்னுடையது லோகாயுத வாதமல்ல என்றெல்லாம் தடபுடல் செய்து 'வெகுஜனங்களை' தம் வாதத்துக்கு செவிசாய்க்கும்படிச் செய்ய கனவு காண்கிறது 'ஜனசக்தி'.

5—6—55 'ஜனசக்தி' இதழில் ஒரு கட்டுரை மூலம் நம்மைப் பற்றியும் நம்முடைய கடவுள்—சமுதாயக் கொள்கைகள் பற்றியும் குறை கூறவந்த தோழர் 'கே. எம்.' எங்கெங்கோ சுற்றி அலைகிறார்.

> 'பரம்பொருளின் மேல் நம்பிக்கை வைக்கும் மனிதர்களை வெறுப்பதில்லை. அவர்களும் விஞ்ஞான அறிவு பெறும்போது உண்மையை உணர்வார்கள் என்றே நம்புகிறார்கள்,''

அதாவது கம்யூனிஸ்டுகள் கடவுளின் மேல் நம்பிக்கை வைக்கும் 'மனிதர்களை' வெறுப்பதில்லை. அவர்கள் அறிவு பெறும்போது உண்மை கடவுள் தத்துவத்தை உணர்வார்கள் என்றே கம்யூனிஸ்டுகள் நம்புகிறார்கள் என்பதுதான் அதனுடைய கருத்து முதல் வாதம். விஞ்ஞான அறிவு பெறும்பொழுது 'உண்மையை' உணர்வார்கள் என்கிறது 'ஜனசக்தி'. அந்த உண்மை என்ன என்பதைப் பற்றிய ஆராய்ச்சி நமக்கு இப்போது தேவையல்லாத ஒன்று! ஆக இப்போதுதான் பாலபாடம் படிக்க ஆரம்பித்திருக்கும் கம்யூனிஸ்டுகள் அந்த உண்மையை ஆராய முற்பட்டிருக்க வேண்டும். அதுதான் நேர்மையுங் கூட. அதைவிடுத்து நம்மீது சீறிப் பாய்கிறது 'ஜனசக்தி'.

'ஜனசக்தி' கூறுவதென்ன வென்றால் நாங்கள் கடவுள் மீது நம்பிக்கை கொண்டோரை வெறுக்க மாட்டோம். அவர்களே அறிவு பெற்று உண்மைக் கடவுளை உணர்ந்து கொள்ளட்டும். அவர்களை திருத்த நாங்கள் ஒன்றும் செய்யமாட்டோம் என்பது தான். கடவுள் நம்பிக்கை யற்றவர்களை கம்யூனிஸ்டுகள் வெறுப்பதில்லையாம். அதுவேறு விவாதத்திற்குரிய விஷயம். நாம் மட்டுமென்ன கடவுள் மீது நம்பிக்கை வைத்திருப்போரை கடித்தா தின்றுவிடுகிறோம்!

கம்யூனிஸ்டுகள், கடவுள் பக்தி கொண்டோர் தானாகவே அறிவுபெற்று உண்மையை உணரட்டும் என்கின்றனர். நாமோ மக்கள் இப்போதே அறிவு வளம் பெற்று உண்மை உணர்தல் அவசியம் என்றும் அப்போதுதான் அரசியல் உரிமையும் நிலைபெற முடியும் என்ற காரணத்தால்தான் சமுதாய சீர்திருத்த பிரசாரத்திலும் ஈடுபட்டுள்ளோம்.

'சோறு' தானாகவே தயாராகிவிடும் நாம் அரிசியைப் போடவோ, தண்ணீரை ஊற்றவோ, கிண்டிக் கிளறவோ வேண்டாம், இன்னும் சொல்லப்போனால் பானை கூடத் தேவையில்லை என்று கூறுவதைப் போலத்தான் இருக்கின்றது கம்யூனிஸ்டுகளுடைய கூற்று! நான் ஒன்றுமே செய்ய மாட்டேன் 'சோறு' வேண்டும் என்பது எப்படி பொருந்தாத வாதமோ அவ்விதம்தான் மக்களை நாங்கள் மூடப்பழக்கவழக்கத்திலிருந்து திருத்த மாட்டோம். தானாகவே திருந்திக் கொள்ளட்டும் என்ற வாதமும்.

தி. மு. கழகத்தினர் முதன் முதல் கடவுள் இல்லை என்றனர், பின்னர் பல கடவுள்கள் இல்லை என்றனர். பிறகு அண்மையில் சொர்க்கவாசலில் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று கூறி பஜனை பாடுகின்றனர், என்பதாகத் தீட்டியுள்ளது 'ஜனசக்தி' இதழ்! ஜனசக்தியின் கவனக் குறைவுக்கு அனுதாபப்படுகிறோம்.

'ஜனசக்தி'யே கேள்! திராவிட இயக்கத்தினர் ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்று அண்மையில் அதுவும் 'சொர்க்கவாசல்' மூலமாக மட்டும் கூறவில்லை. 1949-ம் ஆண்டுக்கு முன்னரே 'வேலைக்காரி' படத்தில் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இவ்வுண்மை கம்யூனிஸ்டுகளுக்குத் தெரியாது. ஏனெனில் அப்போது அவர்கள் இருந்த 'கிரவுண்ட்' வேறு!

இத்தகைய உளுத்துப்போன வாதங்களைப் பேசுவதில் பெயர் பெற்ற ஜனசக்தி தனது போக்குக்கு சிகரம் அமைத்தாற் போன்று ஒரு 'கோயபல்ஸ்'வேலையையும் அதே இதழில் செய்திருக்கிறது நம்முடைய இதழ் கூறுதனவற்றையெல்லாம், கூறுவதாக எழுதி, கூறியிருப்பதை திருத்திக் கூறி வாய்ச் சவடால் அடிக்கும் செயலில் ஈடுபட்டுள்ளது.

27—5—55 'திராவிடன்' இதழில் கேள்வி-பதில் பகுதியில், ஒரு தோழர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் கடவுள் என்பவர் 'அங்கிங்கெனாதபடி நிறைந்திருப்பவர்' என பதிலளிக்கப்பட்டுள்ளது. எங்கும் நிறைந்திருப்பவர் என்றால் எல்லோர் மனத்திலும் நிறைந்திருக்கல் என்பதுதான் அர்த்தம். ஆனால் ஜனசக்தி தனது 'அபார திறமை'யை இதிலும் காட்டி விட்டது. கடவுள் என்பவர் 'அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் இருப்பவர்' என்று நாம் எழுதியிருப்பதாக இதுவே எழுதிக் கொண்டு, கயிறு திரித்து கரடி விட்டிருக்கிறது. நம்நாட்டுக் கம்யூனிஸ்டுகளே இப்படித்தான் போலும்! இல்லாததை எழுதி எக்காளமிடுவதும், நடக்காததை எண்ணி கனவு காண்பதும் சர்வதேசக் கண்டக்காரர்களின் குறைந்த பட்ச திட்டங்களில் ஒன்று எனத் தெரிகிறது

'நிறைந்திருப்பவர்' என்பதை 'பிரகாசமாய் இருப்பவர்' என்று திரித்திருக்கும் இலக்கணப் புலி தான் நம்மைப் பார்த்துக் கேட்கிறார், ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று கூறுவது மடாதிபதியின் முன் மண்டியிடும் நிலைக்கு ஒப்பாகும் என்று!

தோழர் கே. எம். அவர்களின் அவசர குடுக்கைத் தனத்துக்கு நாம் பரிதாபப்படுகிறோம்! மடாதிபதிகளே இன்று நம்முன் மண்டியிடும் காட்சி, அந்த இலக்கணப் புலியின் கண்களை நேருவின் ரஷ்ய விஜயம் மறைத்துவிட்டதோ அறியோம்!

கோயில்களுக்குச் செல்லும் பக்தர்கள் தங்கள் தாய்மொழியில் அர்ச்சனை செய்யும் தன்மானமாவது பெறவேண்டாமா என்று அறிஞர் அண்ணா அவர்கள் அறிவுரை பகன்றதைஏற்று இன்று குன்றக்குடி மடாதிபதி அப்பணியில் முற்பட்டிருக்கிறார் என்றால் என்ன பொருள்!

ஏன் தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டும் என்பதை உணர்ந்தார்களா இந்த உலகாயுதம் பேசும் கம்யூனிஸ்டுகள்.

தமிழில் அர்ச்சனை செய்தால் அர்ச்சனை சொற்களுக்குப் பொருள் புரியும். ஒருவன் அர்ச்சனை சொற்களுக்கு பொருள் புரிந்து கொண்டால் கோயில் பூசாரிகளிடம் இதுவரை வைத்திருந்த மூடபக்தியிலிருந்து விழிப்படைவர். பிறகு அதன் வளர்ச்சி என்ன ஆகும் என்பதை நாம் விவரிக்கத் தேவையில்லை என்று கருதுகிறோம்.

ஆகவே மடாதிபதி முன் மண்டியிடுவது நாமல்ல. இன்னும் சொல்லப்போனால் இருக்கின்ற பிரச்னைகளையெல்லாம் விட்டுவிட்டு ஜாவராவைக் கையிலேந்தி, ஜானகிராமா என்னைக் கைவிடலாமா என்று ஜாவளி பாடி கம்பராமாயண காலட்சேபம்செய்யும் கம்யூனிட்டுகள்தான் மடாதிபதிகளின் முன் மண்டியிடுகின்றனர், எடுத்ததற்கெல்லாம் ரஷ்யாவை எதிர்நோக்கியிருக்கும் இவர்கள் ஓகோ இதை ரஷ்யா எதிர்க்கிறதா அப்படியானால் நாமும் எதிர்ப்போம் ஓங்குக புரட்சி, வீங்குக தொழிலாளர் முதுகு என்று ஏழைத் தொழிலாளர்களை எதிலெதிலெல்லாமோ ஈடுபடவைத்து அவர்களின் கட்டுக்கோப்பான ஒற்றுமையை சிதறடித்து வருகிறது கம்யூனிஸ்ட் கட்சி! இந்த 'வீரர்'கள்தான் நாம் மடாதிபதிகளின் மாடலில் செல்லுவதாக சர்டிபிகேட் கொடுக்க ஆசைப்படுகின்றனர்.

நம் அனைவருக்கும் பொதுவாக ஒரே ஒரு தெய்வம்தானுண்டு. அவன் சகல உயிர்களையும் படைத்தான் அவன் ஒருவனை மட்டும் தொழுவோம் என்று தி. மு. க. தத்துவம் கூறுவதாக 'ஜனசக்தி' கூறுகிறது.

நாம் எப்போதாகிலும் கடவுள் நம்மை படைத்தார் என்று கூறியிருக்கிறோமா! அவனைத் தொழவேண்டும் என்று சொல்லியிருக்கிறோமா! நாம் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்றுதான் கூறுகின்றோமேயல்லாமல் அவன்தான் சகல உயிர்களையும் படைத்தான் அவனை மட்டும் தொழுவோம் மற்றவர்களை விட்டுவிடுவோம் கும்பிடுவோம் குதிப்போம் கூத்தாடுவோம் என்றெல்லாம் நாம் கூறவில்லை. கடவுளைத் தொழவும் புரோகிதன் காலில் விழவும் மதவெறியர்களின் சுரண்டலுக்கு ஆளாகவும் மக்களை மறைமுகமாகத் தூண்டுவதும் 'கம்பராமாயண கம்யூனிஸ்டுகளுக்கே'' லாயக்கானகாரியம் என்பதை நாடு அறிந்துதானிருக்கிறது.

இதுமாதிரி மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட்டு விட்டு முணுமுணுப்பதும் பின்னர் மூக்குடைபட்டு மூலையிலமர்ந்து முகாரி பாடுவதும் முற்போக்கு கொள்கைகள் உடைய கட்சி என்று கூறிக் கொள்பவர்களுக்கு முறையுமல்ல நெறியுமல்ல.

ஆண்டவன் சொன்னான்—ஆண்டவன் கேட்டான் என்று கூறி அவனுக்குப் பணிவிடை செய்ய ஆட்களும் பல்லக்கும் பளபளக்கும் வைரநகைகளும் தேவையா! இதுதான் அவனுக்கு செய்யும் சேவையா என்று கேட்டால் அதற்குப் மூச்சு பேச்சில்லை இந்நிலையில் இவர்கள் ஐக்கியத் தமிழகம் கோருகின்றனர், இவர்களது கருத்துகளுக்குள்ளேயே ஐக்கியம் இல்லாதிருக்கும்போது ஐக்கிய தமிழகத்தைப் பெற்று என்ன செய்யப்போகிறார்களோ நாமறியோம்!

ஆகவே இனியாகிலும் 'ஜனசக்தி' இம்மாதிரி புளுகுணிப்பிரசாரத்தில் ஈடுபடுவதும் இல்லாததை இருப்பதாக்கிக் கதை சொல்லுவதுமான கோயபல்ஸ் பிரசாரத்தில் ஈடுபடாமல் இருக்கும்படி அறிவுறுத்துகிறோம். நாம் எல்லோரும் ஏதோ மூடநம்பிக்கையில் அமிழ்ந்திருப்பதைப் போலவும் ஜனசக்தி மூடநம்பிக்கையை அறவே முறியடித்துவிட்டதைப் போலவும் நமக்கு பாடம் போதிக்க முனைகிறது. என்ன செய்வது! இந்த சமயத்தில் நமக்கு ஆச்சாரியார்—கொத்தலாவலை குழப்பம்தான் கவனத்துக்கு வருகிறது. ஒருக்கால் இவர்களிடமிருந்த 'சர்வதேச சரக்கு' தீர்ந்து விட்டது போலும். ஆகவேதான் இம்மாதிரி கயிறு திரிக்கும் வேலையில் ஈடுபட்டு சம்மந்தமில்லாமல் சரடுவிடுவதும் பின்னர் சரணடைவதுமான பாதையில் நடைபோடுகின்றனர். பரிதாபம்! பரிதாபம்!

மீண்டும் ஜனசக்திக்கு எடுத்துக் காட்டுகிறோம். அறிவைத்தான் நாம் கடவுள் என்று குறிப்பிடுகிறோம். அது எங்கும் நிறைந்துள்ளது. அதை மக்கள் சமுதாயம் நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும் என்பதே நம் கருத்து.

கைத்தறி ஆடையையே அணியுங்கள்

சுவைத்துப் பாரீர்

டபிள்யூ. பி. டி. எழிலன்

வி. கே. கே.

ஆந்திர—கோங்கூரா போல, கன்னட—போளி—பேணி போல, தமிழக பழஞ்சோறுபோல மலையாள கஞ்சி வெள்ளம்!

இந்த கஞ்சிவெள்ளத்தின் மகத்துவமே மகத்துவம்! என்னென்று கேளுங்கோ! கஞ்சி வெள்ளத்தினால் ''காஸ்ட் ஆலிவிங்''கே மட்டம்! ஆனால் கல்வியின் தரமோ ஒரே உச்சம்! நம்ம திராவிட நாட்டிலேயே மலையாளப் பகுதியில் தான் கல்வியின் நிலை மேம்பாடுற்று இருக்கிறது. அதற்குப் பிறகுதான் மற்றத் தமிழக, ஆந்திர, கன்னடப் பகுதிகள்!

இப்போ தோழர் வி. கே. கிருஷ்ணமேனனைக் கஞ்சிவெள்ளம் என்று சொல்லித்தான் அவர் ஒரு மலையாளி என்று அறிய வேண்டுமோ?

நிறை கல்வியறிவு உடையவர் வி. கே. கே. கற்றவைகளைத் தம் வாழ்க்கையில் பொதியவைத்து பயன் அடைகிறார்! அதோடு பயனளிக்கிறார்!

திராவிட நாடு தந்தத் தலைசிறந்த அறிஞர்களுள் ஒருவர் வி. கே. கே. அதுவும் உலக அரசியல் மேதைகளான சர். ஏ. இராமசாமி, இலக்குமணசாமி, சர்தார் கே. எம். பணிகர் போன்றார்களோடு ஒப்புயர்வு கூறத்தக்கவர் வி. கே. கே.!

இந்தோ-சீனப் போரை நிறுத்திய சமீப ஜெனிவா மாநாட்டில் சக்கைபோடு போட்டவர்!

ஐக்கிய நாடுகள் சபையில் பொழிந்துத் தள்ளுகிறவர்!

கடந்த சில மாதங்களுக்கு முன் நடந்திட்ட பாண்டுங் மாநாட்டில் தோழர் நேருவுக்குத் தூணாய் நின்றவர்!—வி. கே. கே. மேனனேதான்!

இன்று டில்லியிலிருப்பார்! நாளை சீனா சென்று பீக்கிங்கில் சூ-யென்-லாயுடன்பேசுவார்! அமெரிக்க விமானிகள் நால்வரை விடுதலை செய்யுமாறு கேட்பார்! வெற்றி பெறுவார்! (அவ்வெற்றியில் எனக்கும் பங்கு கொடு என்று ஐ. நா. சபை தலைக்காரியதரிசி ஹம்மார்க்ஸ் ஜோல்ட் கேட்கிறார்!) உடனே நேரு ருஷ்யா செல்வதற்குள் டில்லி திரும்புவார். சீனாவில் என்ன செய்தார் என்பதை நேருவுக்கும் சென்னையிலுள்ள நமக்கும் வந்து சொல்லிவிட்டு, உடனே பறப்பார் லண்டனுக்கு! அங்கே சர் அந்தோணி ஈடன்—மற்றும் பலருடன் பேசிவிட்டு பறந்திடுவார் கனடாவிற்கு! ஓட்டாவாவில் லெஸ்டர் பியர்ஸன் (வெளிவிவகார மந்திரி, அவர்களிடமும் மற்றும் சம்பந்தப்பட்டவர்களிடமும் பேசிவிட்டு, உடனே இறக்கை விரிப்பார். நியூயார்க். பிறகு வாஷிங்டன் வந்து இறங்குவார்! அமெரிக்க ஜனாதிபதி ஐசன்ஹாவருடனும் ஜான்பாஸ்டர் டல்லசுடனும் பேசுவார்!

இப்படி அவர் அனாயாசமாக உலகஞ் சுற்றிவருவதால்தான் சில வாராந்திர சஞ்சிகைகள் அவரை 'பறக்கும் தட்டுக்கு' ஒப்பிட்டுக் கேலிச்சித்திரங்கள் வரைந்து வியக்கின்றன!

என்ன அவசியம் இந்தப் பறக்குந் தட்டு செயலுக்கு?

பார்மோசா தகராறைத் தீர்க்கணும்! சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் ''முடிச்சு'' போடணும்! உலகில் நிலவும் பிளவுத் தன்மையைத் தளர்த்தணும்! அமைதி நிலவணும்!

அது சரிதானய்யா! உள்ளூரில ஓணான் பிடிக்க முடியல்லே! அசலூரில் ஆனைபிடிக்கப் போறாரோ? கோவா சங்கதியும், காஷ்மீர் சங்கதியும் இங்கே சிரிப்பாய் சிரிக்குது! அங்கே பார்மோசா சங்கதிக்குப் போய்விட்டாரா—என்று நினைப்பாரும், கேட்பாருமில்லாமலில்லை!

சீனாவுக்கும்—அமெரிக்கா வுக்கும் ''முடிச்சு''ப் போட இவர் யாரு ''தரகர்'' என்று கேட்பவருமுளர்!

அவர்களுக்கெல்லாம் வி. கே. கே. சமாதானம் சொல்லியும் வருகிறார்.

என்ன அந்த சமாதானம்? 'தரகர்' என்றால் இரண்டு எதிரிகள் ஏகோபித்து அவர்களுக்குள் ஒரு உடன்பாடு ஏற்பட வேண்டி மூன்றாம் அன்னியரை நியமிப்பது. அப்படிப்பட்டவர்தான் தரகர்! ஆனால் நான் வி. கே. கே. எப்படி தரகனாகமுடியும்? என்னை சீனாவோ அமெரிக்காவோ சமரசஞ் செய்துவைக்க நியமிக்கவில்லை, எங்கள் இந்தியா போரை அறவே வெறுக்கிறது. சமாதானத்தையே நாடுகிறது. அந்த சமாதானம் இந்தியாவோடு ஒடுங்கி விடாமல் உலக முழுமைக்கும் பரவி நிலவிட வேண்டும். அதற்காக வேண்டி நாங்களே விரும்பி சமாதானத்தை தழைக்கச் செய்ய முன்வந்தோம். உலகம் வரவேற்கிறது. அப்போது எங்களை எப்படி 'புரோக்கர்' என்று கூறமுடியும். ஆகவே அது தவறு! அதோடு நாங்கள் அழையா வீட்டுக்கு நுழையாச் சம்பந்தகள்'' எங்களை வேண்டாமென்பவர்களிடம் போகமாட்டோம்!—என்கிற மாதிரியெல்லாம் பதில் கூறி வருகிறார் மேனன்!

அதோடு விட்டார்களா என்றால் கடுமையாக திட்டவுஞ் செய்கிறார்கள் ஒருசிலர்! எப்படி என்று கேளுங்கள்—யாரென்றுங் கேளுங்கள்!

அமெரிக்க அரசவைப் பகுதியின் தலைவர் ஜேம்ஸ் ரிச்சர்ட்ஸ் என்பார் எப்படி மேனனைத் திட்டுகிறார் பாருங்கள்! என்ன இருந்தாலும் நமது திராவிட நாட்டு உலக அரசியல் மேதையை அவ்வாறெல்லாம் பழித்துக் கூறுவது, தலைகிறுக்குத்தனமென்று நீங்களும் துடியுங்கள்!

மேனன்—இந்தியாவின் தென்கோடி அரசியல் வேதாந்தி—ஒரு கடுமையான அமெரிக்க வைரி! அவரை அமெரிக்கர்கள் ஒருநாளும் நம்பக்கூடாது! —பரிசு ஏந்தி அளிக்கவரும் கிரேக்கர்களிடம் ஜாக்கிரதையாய் இரு—என்ற பழமொழி போல) கம்யூனிஸ்டுகளின் கையாள் மேனன்! தம் காரியங்களை சாதித்துக்கொள்ள, கம்யூனிஸ்டுகள் பழக்கி வைத்துக்கொண்ட சரியான தூண்டுகோல் மேனன்! அவர் நடுநிலை வாதியில்லை! ஒரு கட்சியைத்தான் பேசுபவர். நான் (ஜேம்ஸ் ரிச்சர்ட்ஸ) அனுபவத்தில் —1953-ல் ஐ. நா. சபையில் கண்டேன்! கம்யூனிஸ்டு போக்கையே தலையில் தூக்கிக் கொண்டு ஆடியவர். அவ்வளவு ஏன்! ஒரு கம்யூனிஸ்டு கூட—அவனது வலியை அவனாலேயே அழுதுகாட்ட முடியாது.—ஆனால் மேனன் அவனுக்கு மேலாக அழுது காட்டக் கூடியவர்தான்!' எனவே 'மேனன் ஜாக்கிரதை'—போர்டு தூக்கிட்டார் ரிச்சர்ட்ஸ்!

தூயத் திராவிடர் மேனன்! அவருக்கு ஏன் இந்த 'தண்டா' வெல்லாம்? திராவிட நாடு உண்டு நாமுண்டு என்று இருக்கக் கூடாதா? கண்டகண்ட பரங்கிகள் எல்லாம் 'கண்டமானிக்கே' பேசுதுகளே! அவர் ஒரு திராவிடர் என்று என் திராவிட உள்ளம் கொதிக்குதே சார்! துடிக்குதே சாரு!

ஒருவேளை என்னையாடா திராவிடான்னு சொன்னே! என்று என்னையே திருப்பிகிட்டாரனா! சரி! அவர்பாடு அப்புறம்! எனக்கென்ன வந்தது? எப்படியோ போகட்டும்!

தவறான போக்கு !

''கேடுகெட்ட மானிடர்காள்! கூடுவிட்டு இங்கு ஆவிதான் போனபின் யாரே அனுபவிப்பர் பாவிகாள் அந்தப் பணம்?'' என்பது தமிழ் நாட்டில் தொன்று தொட்டு நிலவி வரும் ஒரு கருத்தாழமுள்ள வெண்பாக் கதிர்.

இதன் உண்மையறியா உன்மத்தர்கள் உதாரித்தனமாக பணத்தை விரயம் செய்கிறார்கள். கடவுளின் பெயரால் பக்தியின் பெயரால் பணத்தை பாழாக்குகிறார்கள் பகுத்தறிவற்றவர்கள்.

பதினைந்து இலட்சம் ரூபாயில் திருப்பதி வெங்கடாசலபதிக்கு வைரமுடி! இந்தப் பதினைந்து லட்ச ரூபாயும் வேறுஎதற்கும் உபயோகப்படா வண்ணம் முடங்கி வைக்கப்பட்டப் பணம்தானே (Unused Capital)? அதோடு திருப்பதி கோயிலைப் பற்றியும், அதனுடைய உண்டி வசூல் 'சுரண்டலை'ப் பற்றியும் கூறத் தேவையில்லை.

இப்போது தென்னாட்டு தனவந்தர்களின் தானமாக வடநாட்டிலுள்ள பத்திரிநாத்சாமிக்கு நாலு இலட்சம் ரூபாயில் வைரமுடி!

இதெல்லாம் யார்வீட்டுக் கொள்ளை? வெங்கடேசப் பெருமாளுக்கும், பத்தரிநாத் சாமிக்கும் வைரமுடி சாத்தும் புண்யவான்களே! நம் நாட்டுக் குழந்தைகளின் முடிகளுக்கு எண்ணை கிட்டாமல் பரண்ட தலையுடன் தெருவில் திரிகிறார்களே, கால் வயிற்றுக் கஞ்சிக்கும் இல்லாமல் கதறுகிறார்களே ஒண்டக் குடிசையின்றி நடைபாதை ஓரங்களில் ஒதுங்கி மடிகிறார்களே அவர்களின் அவல நிலையும் கோரக் காட்சிகளும், உங்கள் கண்களுக்குப் படவில்லையா? கடவுளர்களென்ன இவர்களைப்போன்று இருக்க இடமின்றி தெருத்தெருவாக அலைகிறவர்களா? வாய் திறந்து பேசவோ அல்லது படைக்கும் பலவகையான பண்டங்களை புசிக்கவோ செய்கிறவர்களா? அதிகப் பணச் செலவில் செய்து அளிக்கும் வைரமுடிகளை இரு கைநீட்டி வாங்கிக்கொள்கிறவர்களா? வரவேற்கிறவர்கள்தானா? நன்றி நவிலக் கேட்பீரோ?

உண்ண உணவு கொடு, உடுக்க உடை அளி, இருக்க இடந்தா, வாழ வகை செய் என்று பல கோடி மக்கள் கதறும் குரலொலி, பணம் படைத்தோர், பணத்தைப் புதைத்து வைப்பதற்குச் சமமான மணிமுடி செய்து பரமனுக்கு சாத்துவோம், கோயில் எடுப்போம் என்று கூறுபவர்களின் செவிகளில் விழாதது ஏன்?

ஏழைகளை வாழவைப்பது பாபமா? பரமனைக் கொழுக்க வைப்பது ஒன்றுதான் புண்யமா? இத்தகைய போக்கு தவறானதாகக் கருதுவதற்கில்லையா? மாற்றங்காண்பதுதான் எப்போது? இந்த இருபது நூற்றாண்டுகள் போதாவோ?

கடவுள்களா, தரித்திரர்கள்? அன்றி நாட்டு மக்களா தரித்திரர்கள்? அன்று உணர்ந்தார் காந்தியடிகள்! ஏழைகளின் முன்னேற்றமே—அம்முன்னேற்றத்திற்காக உழைப்பதுமே கடவுள் வழிபாடு எனக் கண்டு 'கர்மயோகி' யானார். ஏழைகளுக்குக் கை கொடுத்தார், ஏழ்மையை விரட்டப்பாடுபட்டார்! ஏழைகளின் தோழரானார். அவ்வழியே கடவுளை அணுகினார்!

அவரிடம் ஒப்புவிக்கப்பட்ட செல்வத்தைக்கொண்டும், உற்ற செல்வாக்கை கொண்டும், ஆயிரமாயிரம் மணிமுடிகள் செய்து கல் சாமிகளுக்கும் ஒவ்வொன்றாக நினைத்தால், சூட்டியிருக்க மாட்டாரா? இருக்கும் கோயில்கள் போதா இன்னும் தேவை எனக் கருதினால், கோயில்களின் எண்ணிக்கையை பெருக்கியிருக்க மாட்டாரா? ஏன் செய்யவில்லை? ஏழ்மையின் அஸ்திவாரம் கோயில்கள்! ஒழுக்கக் கேட்டின் அரண் கோயில்! என்று ஏன் கூறினார் காந்தியடிகள்? அத்திருவாக்கை ஏன் உணர மறுக்கிறார்கள் இக்காலத்தில் திருக்கூட பக்தர்கள்!

வங்கக் கவி மணி தாகூர் தம் 'கீதாஞ்சலி'யில் என்ன கூறினார்?

'ஜெபமாலை உருட்டுவதை விடு! இருட்டறையில் கண்ணை மூடி யாரை பூஜிக்கிறாய்? கண்ணைத் திற! எதிரே ஏதுமில்லை என்பதை உணர்! ஓடு! அதோ காலையிலிருந்து மாலை வரை கல் உடைக்கிறானே அவனிடம் கடவுளிருக்கிறது போய்ப்பார்! நெற்றி வியர்வை ஒழுக வெய்யிலென்றும் மழையென்றும் பாராமல் நிலந்திருத்துகிறானே அவனிடம் ஓடு! கடவுளைக் காண்...' என்று கூறினாரே! இம்மணிக் கருத்தை உணரும் நாள் என்நாள் இம்மூட பக்தர்களுக்கு?

இதையெல்லாம் சீர் தூக்கிப் பாராமல் வைர முடி செய்வதும் கோயில் கட்டுவதுமென்றால் என்ன அர்த்தம்?

சென்னையில் ஐயப்பனுக்கென்று ஒரு தனிக் கோயில் இல்லையாம்!—கட்ட திட்டம் முளைத்து வருகிறது, மந்திரிகளின் ஆதரவும் மாஜி மந்திரி அம்மாள் ஆதரவும் கிடைக்குமென அறியக்கிடக்கிறது, அவசியம்தானா?

எல்லாப் பணிகளையும்விட **மக்கள் பணியே தலையாயது** என்று அண்மையில் பிரதமர் நேரு அவர்களும் பசுவதை மசோதாவின்போது கூறியுமிருக்கிறார்! உணருங்கள்! திருந்துங்கள்!

சினிமா நட்சத்திரம் சிம்பன் ஜீ !

இதே 'சுவைத்துப் பாரீர்' பக்கத்தில் கடந்த வாரத்திற்கு முந்திய வாரம் (**திராவிடன் 10-6-55**) 'எங்கே அந்தக் கொரில்லா? என்ற தலைப்பின் கீழ் 'சிம்பன் ஜீ' யைப் பற்றியும் அறிந்தோமல்லமா! ஏற்கனவே அறிந்தபடி அது ஆப்பரிக்கா தேசத்து வாலில்லா மனிதக் குரங்கு இனத்தைச் சேர்ந்தது. 'கொரில்லா' போன்றது.

ஜிப்பி என்று பெயரிடப்பட்ட ஒரு **சிம்பன்** ஜீ என்னும் மனிதக் குரங்கு, நமது சென்னை ஜெமினி ஸ்டுடியோவில்தயாரிப்பிலிருக்கும் '**இன்சானியத்**' என்னும் சினிமாப் படத்தில் நடிப்பதற்காக நியூயார்க்கிலிருந்து சென்னைக்கு விமான மூலம் வருகிறது. நியூயார்க்கிலிருந்து இலண்டன் வந்து இலண்டனிலிருந்து பம்பாய் வந்து கடைசியில் சென்னை ஜெமினி வந்து சேருகிறது இதுவே முதல் குரங்காம் விமானப் பயணம் செய்வது.

அந்த சிம்பன் ஜீ என்னும் மனிதக் குரங்கு ஹாலிவுட் சினிமா நட்சத்திரமாம். அதோடு 'டெலிவிஷன்' நட்சத்திரமுங் கூடவாம்!

ஜிப்பிக் குரங்கையும், அதைப் பழக்கியவரையும் ஜெமினி அதிபர்கள் அனுமதி கொடுப்பதாயிருந்தால் படத்தில் பார்ப்பதற்கு முன்பே நேரில் கண்டு வியக்கலாம்!

புரட்சிக் கவிஞர்

ஒரு நூல்! அதற்கு நூற்றாண்டு விழா! ஆச்சரியமான செய்திதான்! ஆனால் சமீபத்தில் வாஷிங்டனில் இவ்விழா வெற்றிகரமாக (19-5-1955-ல்) கொண்டாடப்பட்டிருக்கிறது! அதுமட்டுமல்ல—அதையடுத்து (31-5-55-ல்) அதை எழுதிய ஆசிரியரின் பிறந்த நாள் விழாவும் சிறப்பாக நடந்தேறியிருக்கிறது!

ஆனால் இவ்வளவு பெருமைகளுக்கும் இலக்கான அந்நூலும், அவ்வாசிரியரும் ஆரம்பத்தில் எப்படி மதிக்கப்பட்டார்கள், அன்றைய நிலை எங்ஙனம் இருந்தது என்றெல்லாம் விளக்குவதுதான் இக்கட்டுரை!

"ஏய்!"

உற்சாகமும் மகிழ்ச்சியும் பொங்கி வழியப் பெருமையோடு, மேஜையின் மேலிருந்த புத்தம் புதிய புத்தகத்தையே வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்த அவன் திடுக்கிட்டுத் திரும்பினன்,

"வேலையைக் கவனிக்காமல் என்ன செய்து கொண்டிருக்கிறாய்!' என்று உரத்த குரலில் அதட்டியபடி அருகே வந்தார் அவன் மேலதிகாரி.

பரபரப்போடு எழுந்தபடி அவருக்கு வணக்கம் தெரிவித்தான் அவன், மேஜையை நெருங்கிய அவர் கண்களில் அப்புத்தகம் படவே அதைக் கையிலெடுத்தார். அதன் மீது பார்வையைச் செலுத்திய அவர் முகம் கோபத்தால் கருத்தது. விழிகள் சிவந்தன. ஆத்திரத்தோடு அதை வீசி யெறிந்தார்.

"இது எப்படி இங்கு வந்தது!" ஆவேசத்தைக் குவழுத்துக் கொண்டு வந்தது இந்தக் கேள்வி. அவனுக்கு உடனே உடல், உள்ளம், எல்லாம் பதறின. எனினும் அமைதியோடு பதிலளித்தான்.

"இது என்னுடையதுதான். இதன் ஆசிரியனும் நான்தான்.

"என்ன! இந்தக் கழிசடைப் புத்தகத்தின் ஆசிரியனு நீ! கவிதை மணிகளிடையே கருத்தற்ற பதரைச் சேர்த்து, இலக்கியத்தையே கெடுக்கத் துணிந்த கயவன் நீ தானு!...உம்! நட வெளியே! இனிமேல் உனக்கு இங்கு வேலையில்லை!" கனல் பறக்கக் கத்தினர் அவர்.

அவன் பொறுமையே உருக்கொண்டவன் போல வீசியெறியப்பட்ட புத்தகத்தை எடுத்து மார்போடு அணைத்து வெளியே நடந்தான். அவன் முகத்தில் வருத்தமோ, வேதனையோ சிறிதுமில்லை எப்போதும் போல சாந்தமான புன்சிரிப்புத்தான் தவழ்ந்து கொண்டிருந்தது. அப்புத்தகம் அங்கு இருப்பதே தவறு என்று கருதும் மேலதிகாரி அவன்தான் அதன் ஆசிரியன் என்றறிந்த பிறகுமா அவனை அங்கு வைத்துக் கொண்டிருப்பார் என்பது அவனுக்குத் தெரியாததா என்ன!

அங்ஙனம் அத்துணை வெறுப்பிற்குள்ளான அப்புத்தகம்தான் என்ன! அதை எழுதிய அவன் யார்?

'புல்லின் இதழ்கள்'—இதுதான் அப்புத்தகத்தின் பெயர்!

'வால்ட் விட்மன்'— இவன்தான் அதனை இயற்றியவன்! ஆம், புரட்சிக் கவிஞன் என்ற புகழ் மொழியிலே புத்தொளி பரப்பும் 'வால்ட்விட்மன்' (Walt Whitman)தான் அப்புதுமைப் பெட்டகத்தை உருவாக்கியவன்! இன்று உன்னதக் கவிஞன் என்று உலகத்தால் போற்றிப் புகழப்படும் அவன் தான் அன்று வெறுப்பின் விருப்புள்ள தோழன்! ஈடு இணையில்லாக் கவிதைச் செல்வங்கள் என்று எண்ணற்றோர் இதயங்களிலே எழுச்சி முரசுகொட்டும் அவன் கவிதைகளைத்தான் மக்கள் அன்று எள்ளி நகையாடினர்! ஏறெடுத்துப் பார்க்க மறுத்தனர்!

எனினும் அப்புதுமைக் கவியின் எண்ணம் புரண்டு விடவில்லை, உண்மைக் புதுமைக் கவியாகவே திகழ்ந்து திண்மையான கருத்துக்களோடு, வசவுகளை வாழ்த்துக்களாக நினைத்து, எதிர்ப்புகளைத் துச்சமெனத் தூக்கியெறிந்து துணிவுடன் தன் வழி நடந்தான். இணையில்லாத இலட்சிய வெற்றியையும் அடைந்து எல்லோர் இதயங்களிலும் புகுந்தான்!

'லாங் ஐலண்டி'ல் உள்ள வெஸ்ட் ஹில்ஸ்' என்ற பகுதியில் விவசாயமும் கைத்தொழிலும் செய்து பிழைத்து வந்த 'வால்டர்' என்ற ஏழைக் குடியானவனுக்கு 1819-ம் ஆண்டு மே 31-ம் நாளன்று பிறந்தான் இந்தஇலட்சியவாதி! எனினும் அங்குபோதிய வருவாய் கிடைக்காமையால் 1823-ல் வால்டர் தன் குடும்பத்தோடு புரூக்லின் நகர் சென்று தச்சுவேலைசெய்து வாழத் துவங்கினன். தந்தையின் அன்பிலும் தாயாரின் அணைப்பிலும் துள்ளிமகிழ்ந்தபடியே வளர்ந்தான் விட்மன்,

தக்க வயது வந்ததும் விட்மனை அவன் பெற்றோர் பள்ளிக்கு அனுப்பி வைத்தனர், ஆனல் விட்மன் படிப்பில் பற்றுடையவனுகவோ, திறமை சாலியாகவோ இருக்கவில்லை. விளையாடுவதிலும் வீண் பொழுதைக் கழிப்பதிலும் தான் அவன் கவனம் சென்றது. பள்ளி ஆசிரியரும், பெற்றோரும் எவ்வளவோ வற்புறுத்தியும் பனிரண்டாம் வயதில், அதுவரை அவனோடு ஒட்டிக்கொண்டிருந்த கல்வித தொடர்பை வெட்டித் தூர எறிந்துவிட்டான்

படிக்கத்தான் முடியவில்லை, தனக்கு உதவியாகவாவது இருக்கட்டும் என்று நினைத்த அவன் தந்தை அவனைத் தன்னுடனேயே வைத்துக் கொண்டார், என்றுலும் அவன் உள்ளம் தந்தையின் எண்ணத்திற்கும் கட்டுப் பாட்டிற்கும் அடங்குவதாக இல்லை. பணம் படைத்தோரின் பிள்ளையாக இருந்தாலும் பரவாயில்லை பஞ்சையின் பிள்ளை பொறுப்புணர்ந்து தொழில் கற்றால் தானே பிழைக்கமுடியும் என்று நினைத்த தந்தை நன்கு யோசனை செய்தார். தன்னுடன் இருப்பதைவிடப் பிறரிடம் இருந்தால் மனம் திருந்துவான் என முடிவு செய்து வக்கீல் ஒருவரிடம் அவனை வேலைக் கமர்த்தினர். அங்கும் அவனுல் அதிககாலம் நீடித்திருக்க முடியவில்லை, இன்றோரிடம் நாளையோர் தொழில் என்று நிலையற்ற பயனற்றதாகத்தான் அவன் இளமை வாழ்க்கை ஓடியது.

சில ஆண்டுகள் இப்படிச் சென்ற பின் அவன் ஓர் அச்சகத்தில் அச்சுக் கோர்க்கும் தொழிலாளியாக அமர்ந்தான். ஆனல் மற்ற இடங்களைப் போலல்லாமல் இங்கு அவன் வாழ்க்கை ஒரு திருப்பத்தை அடைந்தது அவன் இங்கு நிலையான சூழ்நிலையை—அமைதியான முன்னேற்ற வழியை அமைத்துக் கொண்டான்.

மணலிலே வீடுகட்டி அழித்து விளையாடுவதைப் போல, பெட்டிகளிலே இறைந்து கிடக்கும் எழுத்துக்களைச் சேர்ப்பதும், பின் பிரிப்பதும் அவனுக்கு ஒரு விளையாட்டாகத் தோன்றினுலும், அதில் ஒரு கவர்ச்சி விழுந்தது. உள்ளத்திலே உற்சாகத்தையும் செயலிலே ஆர்வத்தையும் குழைத்து விட்ட அந்த வேலையையே உறுதியான தொழிலாக்கித் தன் வாழ்நாள் முழுவதும் தொடரவிரும்பினன். ஓரளவு தொடரவும் செய்து அதில் கெட்டிக்காரனுகவும் ஆனன்.

அந்த நாட்களிலேதான் இளமையில் குப்பையிலே தூக்கி எறியப்பட்டதன் அறிவு வைரத்தைத் தேடி எடுத்துத் தகுந்த முறையிலே பட்டை தீட்டிப் பளபளப் பாக்கினன், அதாவது, அங்கு அச்சேறவரும் சுவையான விஷயங்களும் புத்தகங்களும் அவனைக் கவரவே, அவற்றின் பக்கம் தன் பார்வையைத் திருப்பினன். காந்தத்தோடு இணைந்த இரும்பைப் போல அவன் உள்ளமும் அவற்றோடேயேபிணைந்தது. நல்ல புத்தகங்களைப் படிக்க வேண்டும் அவ்வேலைகளைத் தானே செய்யவேண்டும் என்று நினைத்த அவன் அங்கு வரும் புத்தக வேலைகளைத்தானே முந்திக் கொண்டு சென்று ஏற்ருன்.

நல்ல, நல்ல இலக்கியங்கள் வரும் போதெல்லாம் அவன் களிப்பின் உச்சிக்கே சென்றுவிடுவான். உள்ளத்திலே அப்புத்தகங்களை அப்படியே பதித்தபடி, விறுவிறுப்போடு வேலைகளைச் செய்து அவைகளை சிறந்த முறையிலே அமைப்பான். தன் திறமையினுல் அப்புத்தகங்கள் அருமையாகவும், அழகாகவும் அமைவதைப் பார்த்துப் பூரிப்படைவான். அந்த அளவோடு நின்றுவிடாது அம்மாதிரி இலக்கியங்களைத் தானும் எழுதவேண்டும் என்று முடிவு செய்து முயற்சியும் செய்வான்.

இப்படியே அவன் நெஞ்சமும் கொஞ்சம், கொஞ்சமாக இலக்கியத்தின் கவர்ச்சியிலே இழுக்கப்பட்டு அசைய ஆரம்பித்தது. மெதுவாகச் சிறு, சிறு கட்டுரைகளும் கதைகளும் எழுதத்தொடங்கினன். அவன் நண்பர்களும் அச்சக முதலாளியும் அவனுக்கும் நல்ல முறையிலே ஊக்கம் தரவே அவனுடைய எழுத்தும் ஆர்வமும் வளர்ந்தன. அதனுல் 'பிராங்க்ளின் ஈவான்ஸ்' என்றெரு நாவலையே எழுதி முடித்தான். அதனை நியூயார்க் பத்திரிகை ஒன்றும் 1841-ல் வெளியிட்டு அவனைப் பெருமைப் படுத்தியது. ஆனல் அதனைப் பொதுமக்கள் அப்போது மதித்துப் போற்றவில்லை. ஏன், கவனிக்கவேயில்லை! புதிய எழுத்தாளர்களுக்கே வாசகர்கள் 'பெருமையோடு போர்த்தும் பொன்னுடை (!)' அவனுக்கு மட்டும் விதிவிலக்காய் விடுமா என்ன!

என்றுலும் விட்மன் தளர்ந்துவிடவில்லை தன்னுல் நன்ருக எழுதமுடியும்—தன் எழுத்துக்கள் இன்றில்லாவிட்டால் என்றுவதொருநாள் மக்களிடையே மதிப்புப் பெறும் என்ற நம்பிக்கையோடு தொடர்ந்து எழுதினன். அதன் பலன் 1846-ல் புரூக்லின் டெய்லி ஹெராரல்டு' என்ற பத்திரிகையின் ஆசிரியனுனன்.

ஆனல் பத்திரிகையில் தலையங்கம் எழுதுவதுமட்டுமல்ல அவன்வேலை-பத்திரிகைகளுக்கு வரும் புத்தகங்களுக்கு விமரிசனம் தருவது, நாடக அரங்குகள், பொதுக்கூட்டங்கள், மற்றும் விசேஷ நிகழ்ச்சிகளுக்குச் சென்று செய்திகள் சேகரிப்பது; முதலான இன்னும் பல வேலைகளையும் அவன் செய்யவேண்டியிருந்தது. இவ்வேலைகள் எல்லாம் அவனுக்குத் தொல்லையாக இராமல் மகிழ்ச்சியாகவே இருந்தன. அதனுல் அவன் உற்சாகத்தோடு அவைகளையெல்லாம் நல்லமுறையிலே செய்து முடித்து, பொறுப்பாளர்களிடம் நல்ல பெயரும் பெற்ருன்.

இந்த சமயத்தில் பெரும் பரபரப்பைக் கிளப்பிவிட்ட 'அடிமைச் சந்தை, பிரச்னை எங்கும் எழுந்தது. 'சுதந்திர மனிதன்' என்ற அடைமொழியிலே சுழலும் விட்மன் இதைப்பற்றி எழுதாமல் விடுவானு!' மனிதனை மனிதன் அடிமைபடுத்துவது மடமை; அடிமைப்படுத்தி அடக்கியாள்வது பெரும் கொடுமை. அதனைத்தடுத்து அவர்களை விடுவிப்பது நம் கடமை—என்று 'அடிமைத்தளை'யைப் பற்றி வெகுவாகக் கண்டித்து பத்திரிகையிலே கார சாரமாக எழுதினன். ஆனல் பத்திரிகை முதலாளிக்கு இது பிடிக்கவில்லை. நேரியவழியே தன் வழி என்று நினைத்த அவன் அவ்வாசிரியர் வேலையையே உதறிஎெறிந்து விட்டு 1848-ல் 'நியூ ஆர்லியன்ஸிற்குச் சென்ருன்.

அங்கு சிலரின் கூட்டுறவோடு' 'தி கிரெசென்ட்' என்றெரு பத்திரிகையை ஆரம்பித்தான். அதில் தன் கொள்கைகளையும் கருத்துக்களையும் எழுதினன். அங்கு உடலை வருத்தி உண்மையாக உழைத்துழைத்து உருக்குலையும் உழைப்பாளர்களின் நிலையையும், அவர்களை ஆதரித்தும் கட்டுரைகள் தீட்டினன். எனினும் எவ்வளவோ கஷ்டப்பட்டும் மூன்றுமாதங்களுக்குமேல் அவனுல் அப்பத்திரிகையை நடத்த முடியவில்லை.

இந்நேரத்தில் அவன் வாழ்வில் மீண்டும் ஒரு திருப்பம் ஏற்பட்டது. ஒன்றும் உதவாதவனுகவும், உழைப்பாளியாகவும் இருந்த அவன் இப்போது காதலனுகவும் மாறினன். ஆம், அவனுக்கும் அழகியொருத்திக்கும் தொடர்புஏற்பட்டது. அத்தொடர்பு நாளடைவிலே காதலாகமாற இருவரும் ஈருடலும் ஓருயிருமாயினர். அன்பும், ஆனந்தமும் பெருக்கெடுத்தோட அவர்களிருவரும் இல்லறமமைத்தனர்.

அவ்வாழ்வு விழா, மற்றவர்களின் திருமணவிழா போன்று நடக்கவில்லை—இருமனமும் ஒருமனப் பட்ட நாங்கள் திருமணம் செய்து கொள்கிறோம்

8-ம் பக்கம்

வாசகர்களுக்கு வேண்டுகோள்

எதிர்பாரா வகையில் கடைசி நேரத்தில் திடீரென அச்சு இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறினால் இவ்வாரம் 12 பக்கங்கள் மட்டுமே வெளியிட நேர்ந்தது அதன் காரணமாக திராவிட நாட்டுக் கல்வி வரலாறு பகுதியும் கழகச் செய்திகளும் வெளியிட இடமாமற் போனதற்கு மன்னிக்க வேண்டுகிறோம். அடுத்த வாரத்திலிருந்து வழக்கம்போல 14 பக்கங்கள் வெளிவரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். பொருத்தருளுக.

—நிர்வாகி, 'திராவிடன்'

திராவிடன்

சென்னை : 24—6—55 : வெள்ளி

ஐசன்ஹவர் பேசுகிறார்!

ஐக்கிய நாடுகள் சபையின் 10-வது ஆண்டுவிழா இவ்வாரம் ஐ. நா. சபையின் தலைமை அலுவலகத்தில் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவில் அகில உலக அரசியல் மேதைகள் தங்களின் கருத்துக்களை எடுத்துக் கூறுவார்கள்.

இரண்டாம் உலகப் போருக்கு முற்றுப்புள்ளி வைத்த சமயத்தில்தான் ஐ. நா. சபை உருவாகியது. அந்தப் போரில் ஏற்பட்ட நெருக்கடி, தொல்லை ஆகியவைகளை மனதார எண்ணிப் பார்த்த பிரிட்டன், ரஷியா, அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற வல்லரசுகளின் பெரு முயற்சியாலேயே ஐ. நா. சபை உருவாக்கப்பட்டது. உலக அரசியல் நெருக்கடியோ அதைத் தொடர்ந்து போரோ மூளா வண்ணம் கூடிப்பேசி தகராறுகளைத் தீர்த்து வைப்பதும், சமாதானத்தை நிலைபெறச் செய்வதுமே ஐ. நா. சபையின் முக்கிய கொள்கையாகும். இந்த மகத்தான சாதனையை நிறைவேற்ற ஐ. நா. சபை அப்பழுக்கின்றி தனது கடமையைச் செய்திருக்கிறதென்று கூற முடியாவிட்டாலும், உலக நெருக்கடிகள் வளரா வண்ணம் ஓரளவாவது தடுத்திருக்கிறது என்பதை, ஐ. நா. சபையின் விவரமறிந்த அனைவரும் ஒருமனதாக ஒப்புக் கொள்வார்களென்பதில் ஐயமில்லை.

ஆனால் இந்த அளவோடு ஐ. நா. சபை பெருமை கொள்ள முடியாது. அப்படி பெருமைப் படுவது ஐ. நா. சபையின் முக்கியத்துவத்திற்கு ஏற்றதுமன்று.

ஐ. நா. சபையின் பணி முழுதும் பயனுள்ளதாகவும் வெற்றியைத் தேடித்தரத் தக்கதாகவும் இருக்கவேண்டுமானால் ஐ. நா. சபையில் அங்கம் வகிக்கும் முக்கிய நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன் போன்ற வல்லரசுகளின் வரட்டுஜம்பமும் வீண்வைராக்கியமும் சற்று தளர்ந்தால் ஐ. நா. சபை மகத்தான சக்தியாக விளங்குகிறது என்ற பெருமைக்குக் கூட அவ்விரு நாடுகளே அதிக உரிமையும் கொண்டாட முடியும்.

அமெரிக்கா போன்ற நாடுகள் கையாண்டுவரும் 'வீண் வைராக்கியம்' என்ன? உலகத்தில் பெரும்பகுதி மக்களைக் கொண்ட நாடாகிய மக்கள் சீனாவை ஐ. நா. சபையின் அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்வதற்கு தடையாய் நிற்பதுதான்! மிக மிகச் சிறிய நாடுகளெல்லாம் ஐ. நா. சபையில் இடம் பெற்றிருக்கும் போது. மக்கள் சீனத்தை மட்டும் ஒதுக்கி வைப்பதானது, சீனத்தைத் தாழ்த்தி வைத்திருக்கிறோம் என்று கித்தாப்பு பேசிக் கொள்வதைவிட ஐ. நா. சபையின் அடிப்படைக் கொள்கைக்கே கேடு பயப்பதாகும் என்பதை பத்தாவது ஆண்டுவிழா நடத்தப்படும் இச்சந்தர்ப்பத்திலாகிலும் ஐ. நா. சபையில் இடம் பெற்றுள்ள வல்லரசுகளும் ஏனைய நாடுகளும் உணர வேண்டுகிறோம்.

இங்கிலையில் ஐ. நா. சபையின் பத்தாவது ஆண்டு விழாவைத் துவக்கி வைத்த அமெரிக்க ஜனாதிபதி ஐசன்ஹவர் உலகத்தின் எதிர்கால சமாதானத்தைப்பற்றி பேசும்போது "போட்டி போட்டுக்கொண்டு யுத்த தளவாடங்களை செய்து குவிப்பது நிற்க வேண்டும். ஒவ்வொருவரும் பரஸ்பரம் நல்ல எண்ணத்துடன் பிரச்னைகளை அணுக வேண்டும். இதன் மூலமே உலக சமாதானத்தை நிலைபெறச் செய்யமுடியும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்!

அமெரிக்க ஜனாதிபதி உலக அமைதியை எதிர்பார்ப்பது உண்மையானால், அதற்கு முதற்படியாக மக்கள் சீனாவை ஐ. நா. சபையின் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ள ஆவன செய்வதுதான் அவர் ஐ. நா. சபையின் பத்தாவது ஆண்டு விழாவில் பேசிய பேச்சுக்கு மதிப்பிருப்பதாகும் என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறோம். அதைவிடுத்து வரட்டு வேதாந்திகளைப் போல வாய்ப்பந்தல் போடுவதிலோ அல்லது உருக்கமான உபதேசம் செய்வதிலோ உருப்படியான காரியத்தை ஐ. நா. சபை செய்யமுடியாது. அதுமட்டுமல்லாமல் அமெரிக்கா போன்ற நாடுகளின் முட்டுக்கட்டைதான் இதற்குக் காரணம் என்ற குற்றச்சாட்டுக்கும் ஆளாக நேரிடும் என்பதையும் நினைவூட்டுகிறோம்.

எனவே ஐ. நா. சபையின் பத்தாவது ஆண்டுவிழாவின் நினைவாக வல்லரசுகளிடையே ஒருமித்த எண்ணமும் நம்பிக்கையும் வளர வேண்டும்.

இவ்வித நம்பிக்கை வளர்வதற்கான வழிவகை செய்யாமல் ஒவ்வொரு நாட்டுப் பிரதமர்களும் முறைபோட்டுக் கொண்டு மற்ற நாடுகளில் பவனி வருவதும் அதைப் பெருமைப்படுத்திக் கொண்டு—உலக சமாதானம் இதனால் பூத்துக்காய்த்துப் பழுத்தே விட்டது என்று கித்தாப்பு பேசுவதும் புடம் வைத்துள்ள புண்ணுக்கு வாசனை பூசி இறுதியாக பெரும் ஆபத்துக்கு ஆளான கதையாகவே முடியும் என்பதையும் ஐ. நா. சபையில் அங்கம் வகிக்கும் எல்லா நாடுகளுக்கும் பணிவன்புடன் எச்சரிக்க விரும்புகிறோம்.

நிற்க ஐ. நா. சபை இன்று ஓரளவாவது தலைநிமிர்ந்துள்ளதென்றால் அதில் இந்தியத் துணைகண்டத்திற்கும் பங்குண்டு என்பதை இது சமயம் நினைவூட்டுவது தற்புகழ்ச்சியாகாது.

1945-ம் ஆண்டு ஐ. நா. சபை நிறுவப்பட்டபோது, இந்தியாவிலுள்ள தேசியத் தலைவர்கள் கூட அபஸ்வரம் பாடினர், அவசர ஆருடம் கணித்தனர்! ஆனால் ஐ. நா. சபையின் துவக்கக் கூட்டத்திற்கு இந்திய தூது கோஷ்டியின் தலைவராகச் சென்ற சர். ஆற்காடு ராமசாமி அவர்களின் அறிவாற்றலும் அனுபவமும் இந்தியாவுக்குத் துவக்கத்திலே[illegible]ய பெரும் புகழைத் தேடித்தந்தது என்பதை நேர்மையுள்ளம் படைத்த எவரும் மறுக்க மாட்டார்கள். அதுமட்டுமல்லாமல் தொடர்ந்து ஆறு ஆண்டுகளாக இந்தியாவின் சார்பில் சர். ஏ. இராமசாமி அவர்கள் ஐ. நா. சபையின் முக்கியதுணைக்குழுக்களுக்கு ஏகமனதான தலைவராகவும் மற்ற பொறுப்பான பதவிகளையும் வகித்து அப்புகழை வளரச் செய்தார். அவ்வழியே இன்றுங்கூட வீரநடை போடுபவர் தோழர் வி.கே.கே. மேனன் அவர்கள்தான்என்பதையும் நாம் குறிப்பிட விரும்புகிறோம். அதுபோலவே டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன், டாக்டர் ஏ. லட்சுமணசாமி ஆகியவர்களும் காலஞ் சென்ற சர். பி. என் ராவ் அவர்களும் இந்தியா சார்பில் ஐ. நா. சபை நடவடிக்கைகளில் சாதித்துள்ள காரியங்கள் ஏராளம்,

எனவே ஐ. நா. சபையின் வளர்ச்சியில் தென்னாட்டு அரசியல் மேதைகள்—இந்தியாவுக்குத் தேடித் தந்துள்ள புகழையும் பெருமையையும் கண்டு நாம் பூரிப்படைகிறோம்.

இவர்களின் ஆற்றல் தென்னாட்டிற்கு நல்வாழ்வை தேடித்தர முடியாத சூழ்நிலையிலிருப்பினும், ஐ. நா. சபையில் அங்கம் வகிக்கும் இந்தியா, மக்கள் சீனாவை ஐ. நா. சபையில் உறுப்பினராகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் பிரச்னையிலாவது உறுதியுடன் நடக்குமென்று எதிர்பார்க்கிறோம்.

●

நடக்க இருப்பவை

சேலூர் தி. மு. கழக 5-ம் ஆண்டு விழா

25—6—55 சனி மாலை 6-மணிக்கு ஆரணி சேலூர் (வ. ஆ.) குளக்கரை எதிரில் குமரவேல் அரங்கில் தோழர் முல்லைசத்தி தலைமையில் நடைபெறும். ஆண்டுவிழாவை வி. டி அண்ணாமலை துவக்கி வைப்பார். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், க. அறிவழகன், போளூர் சுப்ரமண்யம் பேசுவர். இரவு 10 மணிக்கு தூக்குமேடை நாடகமும் நடைபெறும்.

திருவொற்றியூர் தி. மு. கழகம்

25—6—55 சனி மாலை 6-மணிக்கு சன்னதி தெருவில் தோழர் எஸ் மாசிலாமணி பி ஏ, தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் டி. கே. சீனிவாசன், இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் பேசுவர். அதுபோது முன்னாள் மாவட்ட செயலாளர் கே. எம். கண்ணபிரான் அவர்களுக்கு பாராட்டிதழ் வழங்கப்படும்.

சிறுகளப்பூர் தி. மு. கழகம்

25—6—55 சனி மாலை 6 மணிக்கு லால்குடி தாலூகா சிறுகளப்பூரில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் என். வி. நடராசன், ஜி. பராங்குசம் பேசுவர்.

குடியேற்றம் தி. மு. கழகம்

27—6—55 திங்கள் மாலை 6-மணிக்கு ஆற்றுத் திடலில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் சிற்றுளி சுப்ரமண்யம், புலவர் மணி எழிலன் பேசுவர்.

திருமணங்கள்

மன்னர் மன்னன்-சாவித்திரி

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் மகன் தோழர் மன்னர் மன்னனுக்கும் மைசூர் அரசவைக் கோள்நிலை ஆராய்ச்சி வல்லுநர் வீரராகவனார் மகள் தோழியர் சாவித்திரி அவர்களுக்கும் 26—6—55 ஞாயிறு காலை 9 மணிக்கு புதுவையில் (பாரதிதாசன் இல்லம்) கோவை தோழர். சி, ஏ. அய்யாமுத்து அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும். பல அறிஞர்கள் வாழ்த்துரை வழங்குவர்.

துரைராஜ்-பொன்னுரங்கம்

நகைச்சுவை அரசர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் மைத்துனரும், தோழியர் டி. ஏ மதுரம் அவர்களின் தம்பியுமான தோழர் டி. ஏ. துரைராசனுக்கும் பழனி வி கே. முத்துசாமி அவர்களின் மகள் எம். பொன்னுரங்கத்திற்கும் 26—6—55 காலை 7-மணிக்கு சென்னை தியாகராய நகர் வெங்கட்ராமய்யர் தெரு 6-ம் எண்ணுள்ள என். எஸ். கே. இல்லத்தில் டாக்டர், எஸ், தருமாம்பாள் அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும். அறிஞர் அண்ணா, திருக்குறளார் முனுசாமி எம். பி., சொற்பொழிவாற்றுவர். மாலை இசைவிழாவும் உண்டு.

வெங்கடேசன் - இராணியம்மாள்

சென்னை 4-வது வட்ட தி. மு. கழகத் துணைச் செயலாளர் த. வெங்கடேசன் அவர்களுக்கும், தோழியர் இராணி அம்மையாருக்கும் 26—6—55 காலை 10 மணிக்கு, சென்னை பழைய வண்ணை மணி கண்ட முதலி தெரு 3-வது லைனில் தோழர் கே. கோவிந்தசாமி தலைமையில் திருமணம் நடைபெறும். தோழர்கள் என். வி. நடராசன், நடிக மணி டி. வி. நாராயணசாமி, தோழியர் தேசிய மணி பேசுவர்.

'நம் நாடு' இதழ் மூன்றும் ஆண்டுத் துவக்க நாளான

15—6—55-ம் நாளன்று

'நம் நாடு' அலுவலகத் தோழர்கள்

அறிஞர் அண்ணா அவர்களுக்கு

வாசித்தளித்த பாராட்டு இதழ்

●

பெருமைசால் தலைவ! எங்கள் இதயம் நிறைந்த அண்ணா!!

நாங்கள் பேறு பெற்றவர்கள்; இருபதாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் வாழ்வது ஒரு பேறு; அந்த வாழ்க்கையை எங்கள் சமுதாயம் முழுமைக்கும் தொண்டு செய்யும் அளவில் அமைத்துக் கொண்டது ஒரு பேறு; அந்தத் தொண்டினை தங்களின் நேரடிக் கண்காணிப்பில் செய்யும் வாய்ப்பினைப் பெற்றதும் ஒரு பெரும் பேறே!

முதன் முதலாக விடுதலை உணர்வு ஏற்பட்டிருக்கும் சமுதாயத் திற்கிடையில் 'நம் நாடு' அலுவலகத்தின் ஊழியர்களாகிய நாங்கள் ஆற்றும் தொண்டு எத்தகைய சிறப்பு வாய்ந்தது என்பதை நினைக்கும் போது—சரித்திர பூர்வமானதொரு பெருமையைச் சம்பாதித்து விட்டோம் என்பதை நினைக்கும்போது—எங்களுடைய பிறவிக்கடன் நிறைவேற்றப்படுவதாகவே நினைக்கிறோம்.

பெற்ற அறிவினைப் பயன்படுத்தும் சிறப்பு பெரும்பாலாருக்கும் கிடைக்கலாம்; ஆனால், பெறக்கூடிய அறிவினைப் பெறுமலிருக்கும் பரிதாபத்துக்குரிய தோழர்களுக்காகப் பரிந்து பேசும் வாய்ப்பு அனைவருக்கும் கிடைப்பதல்ல; அதற்கு நெஞ்சுரம் வேண்டும்; நேர்மைத் திறன் தேவை; எட்டிய யோசனையும், எடுத்ததை முடிக்கும் ஆற்றலும் அவசியம்.

இந்த உறுதியும் திறனும், அறிவும் ஆற்றலும் ஒருங்கே அமைந்த ஒருவராக எங்கள் அண்ணாவால்தான் இந்த நாட்டில் ஒளி வீசித் திகழ முடிகிறது; அந்த ஒளிப்பிழம்பின் பேரனலை அவரவர் தேவைக்குத் தக்கபடி பயன்படுத்திக் கொள்ளப் பாதை வகுக்கும் பெரும் பணி 'நம் நாடு' அலுவலகத் தோழர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது—நாங்கள் பேறு பெற்றவர்கள்.

பெறற்கரிய பேறினைப் பெற்றிருக்கும் எங்கள் பெருமையை என்றும் காப்பாற்றிக் கொள்வோம்; அதற்கான சூழ்நிலையை உருவாக்க முயல்வோம்.

தாங்கள் ஏற்றி வைத்திருக்கும் உரிமை தீபத்தின் ஒளி எங்கெல்லாம் பளிச்சிடுகிறதோ அங்கெல்லாம் எங்கள் தொண்டின் முத்திரை பொறிக்கப்படுவதே எங்கள் குறிக்கோள் என்பதை உறுதியாகச் சொல்லிக் கொண்டு தங்களைப் பாராட்டுகிறோம்; தங்கள் தொண்டுக்கு சிரம் தாழ்த்துகிறோம்; தங்கள் அறிவுரைக்குச் செவிமடுக்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர்

நாவலர் இரா. நெடுஞ்செழியன்

அவர்களுக்கு

வாசித்தளித்த வரவேற்பிதழ்

●

நாடு போற்றும் நாவலர் அவர்களே !

பொறுப்புமிக்க தங்கள் பதவிப் பெருஞ் சுமையின் சுமைதாங்கிகளான நாங்கள் பொங்குமாங் கடல் போன்ற பூரிப்புடன் தங்களை வரவேற்கிறோம். அண்ணா அவர்களின் தலைமையிலே தொண்டாற்றியபோது காட்டிய ஊக்கமும் உற்சாகமும் என்றைக்கும் எங்கள் உள்ளத்தில் நின்று நிலவும் என்ற உறுதியுடன் தங்களை வரவேற்கிறோம்.

'நம் நாடு' இதழின் ஊழியர்கள், வெறும் கூலிகள் என்ற முறையில் ஒருபோதும் நடத்தப்பட்டதில்லை; அவர்களும், யாரையும் எஜமானனாகக் கொண்டாடியதில்லை.

எங்கள் இயக்கம் வளர, விடுதலை துரிதப்பட தங்களுடைய எழுத்தோவியங்களைத் தீட்டுங்கள்; அவைகளை பட்டிதொட்டிகளில்—சிற்றூர் பேரூர்களில் எதிரொலிக்கும்படியாக நாங்கள் பணியாற்றுகிறோம். தாங்கள் குறிப்பிட்ட இடத்தில் பேசுங்கள்—நாங்கள் அதை கோபுர உச்சியிலிருந்து நாட்டு மக்கள் அனைவருக்கும் கேட்கும்படி முழங்குகிறோம்.

நாங்கள் பேறு பெற்றவர்கள்—உழைக்கப் பிறந்தவர்கள். மனிதனின் குணாதிசயங்கள் எப்படியெல்லாம் அமைந்திருந்தால் நல்லது என்று, தாங்கள் வகுத்து வைத்திருக்கும் இலக்கணம் எப்படிப்பட்டதென்பது எங்களுக்குத் தெரியாது. ஆனால், தங்கள் அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமாக நாங்கள் ஒவ்வொருவரும் விரும்புகிறோம்—முயற்சி எடுத்துக் கொள்வோம் என்ற உறுதி கூறி தங்களை வரவேற்கிறோம்.

வணக்கம்

'நம் நாடு' அலுவலகத் தோழர்கள்.

புரட்சிக் கவிஞர்...தொடர்ச்சி

என்று அழைப்பிதழ் அச்சிட்டு யாருக்கும் வழங்கவில்லை; அலங்காரப் பந்தலும், ஆடம்பரமும் செய்து ஆயிரக் கணக்கிலே பணத்தைச் செலவிடவில்லை; ஆண்டவனின் பிரதிநிதியாக அவர்கள் மணத்தை அங்கீகரித்து ஆசீர்வதிக்க புரோகிதரைக் கூட அவர்கள் அழைக்கவில்லை—இருவரும் சேர்ந்தார்கள், இணைந்து வாழலாம் என்று முடிவு செய்தார்கள், உடனே வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டு குடும்பமமைத்தார்கள், அவ்வளவுதான் அத்தனை புரட்சி மனப்பான்மை அவனோடு இணைந்திருந்தது!

இன்பத்தைத் தெளித்தபடியே ஆண்டுகள் பல உருண்டன. அதுவரை அவனோடு இணைந்து இல்லறத்திலே மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டிருந்த அவன் காதலி திடீரென்று ஒருநாள் அவனை விட்டு விலகிவிட்டாள். அவள் யார், ஏன் விலகினாள் என்றெல்லாம் யாருக்குமே தெரியாது. தாங்கள் இருவரும் ஒன்றுபட்டிருந்தபோது வாழ்க்கை சந்தோஷமாகக் கழிந்தது. குழந்தைகள் பிறந்தன. ஒரு பேரன் கூட உண்டு. இவ்வளவு மட்டும் பகிரங்கமாகத் தெரிந்தால் போதும் என்று பிற்காலத்தில் கூறிய விட்மன் அதற்கு மேல் வேறு எதையும் வெளியிட மறுத்துவிட்டானும். அவள் மேல் இருந்த உண்மை அன்பால், அவன் வேறுயாரையும் மணம் செய்து கொள்ளாது தனியனாகவே கழிக்கவும் செய்தான்.

'நியூஆர்லியன்ஸ்' வாழ்வு விட்மனுக்கு வெறுப்பைத் தரவே புரூக்லினுக்கே திரும்பிவிட்டான். அங்கிருந்தவாறே பத்திரிகைகளுக்குக் கதை-கட்டுரை-கவிதைகள் எழுதியனுப்பியதோடல்லாமல் தந்தையின் தச்சு வேலைக்கும் உதவி புரிந்து வரலானான்.

மன உழைப்போடு நில்லாமல் உடலுழைப்பாலும் ஈடுபட்ட விட்மனின் கவனம் இந்த நேரத்தில் ஏழை உலகின் பக்கம் திரும்பியது. ஓய்வு நேரங்களிலும், வாய்ப்பேற்படும் வேளைகளிலும், உழைப்பாளிகள் வாழும் பகுதிகளுக்குச் சென்று அவர்களோடு உளம்விட்டுப் பழகினான். பஞ்சமும் வறுமையும் சூழ்ந்து நிறக் குறையின் உருவங்களாகவே அவர்கள் உலவிக் கண்ணீர் வடிப்பதை அறிந்தான், அதற்குக் காரணம் அவர்களிடை மண்டிக்கிடக்கும் பழமைச் சேறுதான் என்பதையும் உணர்ந்தான்.

வேலைக்குச் செல்வதற்கும் தங்கள் வயிற்றைக் கழுவுவதற்குமே நேரமற்ற அந்த ஏழைகள்; போதிய வசதியில்லாததால் தங்கள் செல்வங்களையும் அறியாமையின் வாரிசுகளாக்கிப் படிப்பறிவில்லாமல் பாழாக்கும் கொடுமையைத் தடுக்கவேண்டும் என்று முடிவு செய்தான். அந்த அளவோடுநின்று விடாமல் அதற்கான முயற்சியிலும் ஈடுபட்டான்-லாங் ஐலண்டிற்குச் சென்று நான் கைந்து ஆண்டுகள் ஆசிரியனாகப் பணியாற்றி ஏழை மாணவர்களுக்குப் படிப்புச் சொல்லித் தந்தான்.

அந்த நாட்களிலே அவன் தன் அறிவை மேலும் வளர்த்துக்கொண்டான். பெரும் பெரும் ஆசிரியர்களின் உலகப் பிரசித்தமான இலக்கியங்களையெல்லாம் படித்தான். அதைப்போலவே நிறைய எழுதவும் செய்தான். இப்படி அமைதியாக ஓடிக்கொண்டிருந்த அவன் வாழ்க்கையில் திடீரென்று ஒரு புயல் எழுந்தது. அவன் தந்தை மறைந்தார். அதனால் அவன் பெரும் அதிர்ச்சிக்குள்ளானாலும், ஓரளவு தேற்றிக் கொண்டு மீண்டும் தன் வாழ்வை அமைதியாகவே ஓட்டினான்.

அவ்வமையத்திலேயே 'தி லாங் ஐலண்டர்' என்றொரு பத்திரிகையைத் துவக்கினான். அப்பத்திரிகை அதிக அளவு விற்பனையாக வில்லையானாலும் வெகுசிரமப்பட்டு இரண்டாண்டுகள் வரை தொடர்ந்து நடத்தினான். அதற்கு மேல் சமாளிக்க முடியாமற் போகவே பத்திரிகை நிலையத்தையே விற்று விட்டான் பிறகு, 'ஜமைக்கா'வில் கடந்து வந்த லாங் ஐலண்ட் டெமாக்ரெட்' என்ற 'பத்திரிகையின் ஆசிரியப் பதவி விட்மனுக்குக் கிடைத்தது.

என்றாலும் அவனால் அதையும் நீண்டு தொடர முடியவில்லை. மான் ஹாட்டன் என்ற ஊருக்குச் சென்று அச்சுக் கோர்க்கும் வேலையிலேயே மீண்டும் அமர்ந்தான். அங்கிருந்தவாறே பல பத்திரிகைகளுக்குத் தன் எழுத்தோவியங்களை அனுப்பிவந்தான்.

பிறகு அதையும் நீடிக்காமல் புரூக்லினுக்கே திரும்பினான். முன்னைப் போல பயனற்ற வேலைகளும், நாடோடி வாழ்வும் நடத்தாமல் மிகச்சிறந்ததோர் பணியிலே ஈடுபட்டான். 'ரோமன் சகோதரர்கள் அச்சகத்தில் சிறு தொகை கொடுத்துத்தானே தன் புத்தகத்தை அச்சுக்கோர்க்கும் வேலையில் ஈடுபட்டான் முதல் புத்தகத்தையும் வெற்றிகரமாக உருவாக்கி 1855-ம் ஆண்டு மே திங்கள் 19-ம் நாளன்று பெருமையோடு வெளியிட்டான்.

அப்புத்தகத்தில் தலைப்பில்லாமல் 12 கவிதைகள் இருந்தன. முதற் பக்கத்தில் உழைப்பாளிகள் உடுக்கும் சாதாரண உடையும், விலைமலிவான அகன்ற தொப்பியும் சிறிய தாடியுமுடைய அவன் படம் ஒன்று இருந்தது. ஒரு கவிஞனுக்குரிய தோற்றமோ அல்லது கற்றுப் புத்தகம் வெளியிடும் ஆற்றல் பெற்றவன் அணியும் உயர்ந்த ஆடை, அணிகலன்களோ அதில் காணவில்லை. மேலும் அதை எழுதிய அவன் பெயரும் அதில் பொறிக்கப்படவில்லை; ஆனால் அப்படத்தை யடுத்து ஒரு நீண்ட முகவுரை இருந்தது. அதில் கவிதை என்றால் என்ன, அதன் தத்துவம் யாது, கவிதையின் இலக்கணம்—அமைப்பு எப்படி யிருக்க வேண்டும் என்றெல்லாம் விளக்கப்பட்டிருந்தது. இவ்வளவுதான் அப்புத்தகம்! அதன் விலை இரண்டு டாலர்!

அப்புத்தகத்தின் பெயர் 'புல்லின் இதழ்கள்'! ஆம் பிற்காலத்தில் இமயத்தின் உயரத்தையும் பசிபிக்கின் ஆழத்தையும் தன்னுள்ளே கொண்டு தனிப் பெயர்பெற்ற 'புல்லின் இதழ்கள்' என்ற புத்தகத்தின் முதற்பதிப்புத்தான் அது! (அடுத்த இதழில்முடிவுறும்)

—சிந்தனைச்செல்வன்

நேருவும் கம்யூனிஸ்டுகளும்

'நேரு பண்டிதர் ரஷ்யா சென்றுள்ளார்! நாமெல்லாம் அறிந்தது தான். அவருடைய ரஷ்ய விஜயம அரசியல் உலகிலே என்னென்ன மாற்றங்களை உண்டாக்கி யிருக்கிறது என்பதைப்பற்றி ஆராய வேண்டியது அவசியந்தான்; பண்டித நேரு ரஷ்யாவுக்கு சுற்றுப்பயணம் சென்றுள்ளாரென்றால் அது ஒன்றும் ஆச்சரியப்பட வேண்டியதொன்றல்ல—காங்கிரஸ் நண்பர்கள் கருதுவதுபோல் எட்டாவது அதிசயமுமல்ல. ஒரு நாட்டின் பிரதமர், இன்னொரு நாட்டுக்கு அழைப்பின் மீதோ அன்றி அவசரத்தின்மீதோ செல்வது அரசியல் துறையிலே சர்வ சாதாரணமான விஷயம். அதனை மிகைப்படுத்தி 'மவுண்ட்ரோடு பெத்தபெருமாள்கள்' எழுதுகிறதென்றால், அது வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் மீதுள்ள 'பக்தி'யின் விளைவேயன்றி வேறொன்றுமில்லை.

பண்டிதர் நேரு சென்றிருக்கிறார் ரஷ்யாவுக்கு! எப்படிப்பட்ட நேரு என்பதுதான் நாம் கவனிக்க வேண்டிய விஷயமாகும்; பொதுவுடைமை மணம் பரப்பி, நமக்கெல்லாம் புதுமைநாடாகவும்—பரந்த கண்ணோட்டக்காரர்களுக்குப் 'புண்ணிய' ஸ்தலமாகவும் இருக்கக்கூடிய ரஷ்ய நாட்டுக்கு—ஆசியாவின் ஜோதி சென்றிருக்கிறார்! 'மாடல் சோஷலிஸத்தின்' ஏகப்பிரதிநிதி 'ஒரிஜினல் சோஷலிஸத்தை' அமுலாக்கி வரும் ஒரு நாட்டுக்குச் சென்றுள்ளார். இந்த அளவிலே—முறையிலே வேண்டுமானால் பண்டிதரின் ரஷ்யப்பயணம் குறிப்பிடத் தக்கதாக இருக்கலாமேயன்றி, வேறொன்றும் புதுமையில்லையென்பதுதான் நமது கருத்தாகும்;

காங்கிரஸ் ஆட்சிக்கு நல்லதோர் குழிதோண்டி அதனை நாள் நட்சத்திரம் பார்த்து புதைக்க வேண்டுமென்று கங்கணம் கட்டி, திட்டங்கள் பல தீட்டி—மேடைகள் பலவற்றில் கனல் தெறிக்கப்பேசி— ஆலோசனைகள் பலசெய்து 'வெகுஜன' இயக்கத்தை கட்டி ஆள்பவர்கள் கம்யூனிஸ்டுகள்! இது இங்கே — இந்தியாவில்! நேரு பெருமானின் சாதனைகளையும், நிர்வாகத்தையும் போற்றிப் புகழ்கிறது பிராவ்தா—ரஷ்ய நாட்டுச் செய்தித் தாள்! இது அங்கே — ரஷ்யாவில்! பிராவ்தா சாதாரண செய்தித்தாளல்ல. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் கேடயம் அது! முன்னர் போற்றிப் புகழ்ந்தது. இப்போது வாழ்த்தி வரவேற்கிறது.

பண்டிதர் சாதாரண காங்கிரஸ்காரரல்ல,—விஷயம் தெரிந்தவர், நாம் மறுக்கவில்லை: அவரது அறிவையோ—அல்லது அவரது சர்வதேச அரசியல் நடவடிக்கைகளையோ, குறைத்து மதிப்பிடவில்லை நாம். எப்படிப்பட்ட பண்டித நேரு, எப்படிப்பட்ட ரஷ்ய நாட்டுக்குச் சென்றிருக்கிறார் என்பதைததான் இங்கு கவனிக்கவேண்டும். குறிப்பாக சர்வதேச அரசியலிலே புழுதியைக்கிளப்பும் கம்யூனிஸ்டுகள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பண்டித நேரு யார்! எப்படிப்பட்டவர்! 'இந்தியாவின் முடிசூடா மன்னன்—'இப்படி சுருக்கமாகப் பதில் சொல்லிவிடுவார்கள் தேசிய நண்பர்கள், ஏகாதிபத்தியத்தின் செல்லப்பிள்ளை என்று கூறி முடித்துவிடுவார்கள் கம்யூனிஸ்டுகள்; அவ்வளவு சுருக்கமாகக் கூறி முடித்துவிடக் கூடியதல்ல அது! கம்யூனிஸ்டுக் கட்சிக்கு தடைவிதித்து தன்னுடைய பரந்த மனப்பான்மையைக் காட்டிக் கொண்டவர் இந்த நேரு!எண்ணற்ற கம்யூனிஸ்டுகளை காங்கிரஸ் ஆட்சி சுட்டுக் கொன்றதிலிருந்து! சேலம் சிறையிலே கம்பிகளை பிடித்துக் கொண்டு நின்ற பொதுவுடைமைத் தோழர்களை, காடை, கௌதாரி, முதலிய பறவைகளை வேட்டைக்காரன் சுட்டுத் தள்ளுவதுபோல் சுட்டுத் தள்ளிய ஆட்சியின் அதிபர்தான் நேரு' தப்பித் தவறி சிவப்பு நிறச் சட்டை எவனாவது அணிந்திருந்தால் காரணம் எதுவும்கூறாமல், அவனையும் கம்யூனிஸ்டோ, என சந்தேகித்து சிறையினுள்ளே தள்ளிய ஆளவந்தாரின் தலைவர்தான் நேரு! இதை யெல்லாம் செய்தவர் யார்! ஐசநோவரல்ல! அட்லியல்ல! ஈடனுமல்ல பண்டிதர் நேரு; இவர்தான் இப்போது ரஷ்யா சென்றுள்ளார்.

ஆகவேதான் கம்யூனிஸ்டு நண்பர்கள் குதிக்கின்றார்கள். கூத்தாடுகின்றார்கள்; கம்யூனிஸ்டு நண்பர்களின் இந்த கூத்தாட்டம் சீன நாட்டுத் தளபதி சூ-என்-லாய் இந்தியாவுக்கு வந்து, நேருவுடன் சேர்ந்து பஞ்சசீலக் கொள்கையை வகுத்தவுடனேயே ஆரம்பமாகி விட்டது! இப்போது அது உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது; ''மாஸ்கோவில் நேருஜி''—58 கோடி மக்களின் அசைக்கமுடியாத நட்புறவு—பிராவ்தா வரவேற்பு ''என்று பெரிய எழுத்துக்களில் முதல் பக்கத்தில் எழுதி, 'ஜனசக்தி' ஏடு தன்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றது; நேருஜி அவர்கள் ரஷ்யா சென்றமைக்காக கம்யூனிஸ்டுகள் அவரை பாராட்டுகின்றார்கள்; ''இந்திய சமாதான தூதருக்கு சோவியத் மக்களின் வரவேற்பு'' என்று மகுடமிட்டு கார்ட்டூன் வரைந்து துள்ளி விளையாடுகின்றது ''ஜனசக்தி!''

பண்டித ஜவஹர்லால் நேரு உலக சமாதானத்துக்காக பாடுபட்டால் கம்யூனிஸ்டுகள் மட்டுமல்ல, நாம் கூடத்தான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். நல்லவற்றைச் செய்யின் அதனை போற்றிப் புகழ்ந்து பாராட்டுவது மனிதப் பண்பாகும். மறுக்கவில்லை நாம். சமாதானத்தின் தூதுவர் என்று கம்யூனிஸ்டுகள் பண்டித நேருவைப் பாராட்டுகிறார்களென்றால், அவர்கள் நேரு ஆட்சியையே ஆதரிக்கின்றார்கள் என்றல்ல பொருள். அப்படிச் சொல்வதற்கே விரும்பாதவர்கள் நாம். பாராட்டுதலுக்கும்—ஆதரித்தலுக்கும் வித்தியாசம் தெரியாத அரசியல் அஞ்ஞானப் பிராணிகளல்ல நாம், இப்படி —பாராட்டினால்— ஆதரித்துவிட்டார்கள் பார்த்தீர்களா என்று சொல்லும் பாலைவனப் புத்தி கம்யூனிஸ்டுகளுக்கே சொந்தமான பரம்பரை சொத்தாகும் என்பதில் எள்ளளவும் சந்தேகமே கிடையாது.

சந்தர்ப்பத்தை சுட்டிக்காட்டி நம்மால் விளக்கங்காட்ட முடியும். புதிய கல்வித்திட்டம்—உளுத்துப்போன திட்டம்—நாட்டுக்கு தேவையில்லாத திட்டம். மாஜி முதன் மந்திரி ஆச்சாரியார் இந்த திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தார் என்ற காரணத்துக்காக அவரை எதிர்த்தோம்—பார்ப்பனர்என்பதற்காக அல்ல. அந்த வேண்டாத திட்டத்தை தற்போதைய மந்திரி காமராஜர் உடைத்துத் தள்ளினார். ஆகவே நாம் பாராட்டினோம்— பாராட்டினோம் என்றால் அவர் பச்சைத் தமிழன் என்பதற்காக அல்ல, வாழ்த்தினோம் காமராசரை! 'பாராட்டு' என்றால் என்ன என்ற சராசரி அரசியல் தெளிவு இல்லாத காரணத்தால்— 'காமராசரை தி. மு. க. ஆதரித்துவிட்டது!' என்ற அவசர முடிவுக்கு வந்துவிட்டார்கள் பரந்த கண்ணோட்ட நண்பர்கள். பாவம்! என்ன செய்வார்கள்! நமது ஆழ்ந்த அனுதாபம் அவர்களுக்கு உரித்தாகட்டும்,

இப்போது பண்டித நேருவை அவர்கள் சமாதானத்தின் தூதுவராக்கிப் பாராட்டுகிறார்கள். அவர்கள் நம் விஷயத்தில் கையாண்ட அதே முறையை நம்மால் கையாள முடியாதா என்றால் முடியும்; ஆனால் நாம் கம்யூனிஸ்டுகளல்லவே! அரசியல் மேதை அண்ணா கண்ட இயக்கத்தைச் சேர்ந்தவர்களாயிற்றே. ஆகவேதான் அந்த நாகரீகமற்ற குயுக்தியை நாம் கையாளவில்லை.

பண்டித நேருவைப் பொறுத்தளவில் கம்யூனிஸ்டு நண்பர்களின் மனோபாவம் நாளுக்குநாள் மாறிக்கொண்டே வருவதாக நாம் இப்போது சந்தேகப்பட வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். நமது இத்தகைய சந்தேகம் தவறானதென்றால் அதனை நீக்கும் பொறுப்பை அவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்,

ஆந்திரத் தேர்தலிலே கம்யூனிஸ்டுகள் படுதோல்வி அடைந்தார்கள். என்றால், அதற்கு இதுவும் ஒரு காரணம் என்பதை அவர்கள் அவ்வளவு சீக்கிரத்தில் மறந்துவிடமாட்டார்கள் என்றே நாம் எண்ணுகிறோம். பண்டிதர் நேரு, தான் பிரதம மந்திரியாக பதவி யேற்ற பின்னர், எத்தனையோ நாடுகளுக்குச் சென்றிருக்கின்றார். அமெரிக்க நாட்டுக்கு அவர் சென்றிருந்த சமயத்தில், அவருக்கு அங்கு தரப்பட்ட மகத்தான வரவேற்பைக் கண்டு, கம்யூனிஸ்டு நண்பர்கள் அப்போது பண்டித நேருவை அமெரிக்காவின் செல்லப்பிள்ளையாக்கிக் காட்டினார்கள்; அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வலையில் சிக்கிவிட்டார் என்று கூறினார்கள்; ஆனால் அமெரிக்காவோடு நின்றுவிடவில்லை நேரு. சீனா சென்றார். சீனத்தலைவர் சூஎன்லாய்இங்குவந்தார்; இப்போது ரஷ்யா சென்றுள்ளார்; இனி ரஷ்யப் பிரதமர் புல்கானின் இங்கு வந்தாலும் வரலாம்; இப்படி அவர் கம்யூனிஸ்டுகள் நாடுகளைப்போய் காணுவதால், அவருடைய மனோபாவத்தில் ஏதோ ஒரு புதிய மாறுதல் ஏற்பட்டதாக கம்யூனிஸ்டுகள் கருதினால், அது அரசியலிலே அவர்களுக்குள்ள பமரூக்குறை அறிவைத்தான் காட்டும்! சீனாவுக்குப் பண்டித நேரு சென்ற சமயத்தில்கூட, அவரைப்பற்றி இப்படித்தான் எதிர்பார்த்தார்கள்; ஆனால் நடந்ததென்ன! கம்யூனிஸ்டுகள் எதிர்பார்த்தது போல், அவர்ஒன்றும் இந்தியாவை சீனாவாக்கிவிட வில்லை; சீனாவாக்கும் முயற்சியிலும் ஈடுபடவில்லை; மாறாக், கம்யூனிஸ்டு நாடுகளெல்லாம் கை கொட்டிச் சிரிக்கும்படியான ஓர் மாடல் சோஷலிஸத்தைத்தான் அவர் ஆவடியிலே மக்களுக்குத் தந்தார்! நிலைமை இப்படி இருக்கும்போது, அவருடைய ரஷ்ய விஜயத்திலிருந்து என்ன உருவான பலனைத்தான் இந்தியா காணப் போகின்றதோ, எல்லாம் அந்த கம்யூனிஸ்டுகளுக்குத் தான் வெளிச்சம்!

ஏதோ ஒரு சில கம்யூனிஸ்டு நாடுகளுக்கு அவர் சுற்றுப்பயணம்சென்றிருக்கின்றார் என்பதற்காக, கம்யூனிஸ்டுகள் நேருபற்றிய தங்களின் மனோபாவத்தை கொஞ்சம் மாற்றியிருப்பதாக தெரிய வருகிறது; ஆகவேதான் அவரை விண்ணிலே பறக்கும் சமாதான வெண்புறாவாகச் சித்திரந்தீட்டி தன்னுடைய நேரு பக்தியை 'ஜனசக்தி' ஏடு காட்டிக்கொள்கிறது!

சமாதானத்துக்காக அவர் அப்படி என்னதான் பாடுபட்டுவிட்டார் என்பதையாவது கம்யூனிஸ்டுகள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்; இல்லையேல், சமாதானத்துக்காக உழைப்பதற்குபண்டித நேருவை ஐ நா. சபை வேண்டிக் கொண்டதா என்பதையாவது அவர்கள் வாதத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

சாக்கடைத் தொட்டியிலே நின்று கொண்டு சுகாதாரப் பிரசங்கம் செய்கின்றார் பண்டித நேரு!

கண்ணகியின் பெயரால் பந்தல் அமைத்து அங்கே திரௌபதியின் நாட்டியத்தை நடத்துகின்றார் அவர்!

வல்லூறுகளுக்கு தீனி போட்டு வானத்திலே வட்டமிடச் செய்துவிட்டு வெண்புறாக்களையும் பறக்க விடப் போகிறேன் என்கிறார் அவர்!

பண்டிதரின் சமாதானப் பிரசங்கம் நமக்கு இதைத்தான் ஞாபகமூட்டுகிறது, சொந்த நாட்டிலே குமுறல்—கொந்தளிப்பு—பிரிவினைக் கிளர்ச்சிகள்—அடக்குமுறைகள்—மொழிப்போராட்டங்கள்—வேலையில்லாத் திண்டாட்டம் முதலியன எல்லாம்! கம்யூனிஸ்டுகளுக்குத் தெரியாததல்ல இது! புரியாததுமல்ல. இப்படிப்பட்ட நாட்டின் பிரதமர்தான் உலக சமாதானத்துக்காகப் பாடுபடுகிறாராம்! சமாதானத்தைக் கையோடு கொண்டுவரப் போகிறாராம்! அதனால் கம்யூனிஸ்டுகளெல்லாம் மகிழ்கிறார்களாம், வேடிக்கைதான்!

கம்யூனிஸ்டுகளின் மனோபாவம் எப்படியிருந்த போதிலும் ஒன்றுமட்டும் நிச்சயம், உறுதியாகக்கூட கூறமுடியும். நேருவின் ரஷ்ய விஜயத்தால் கம்யூனிஸ்டுகள் எதிர்பார்க்கும் பலன்கள் நிச்சயமாக உருவாகாது என்பதுதான் நமது எண்ணம்! காரணம் அவர் ஏகாதிபத்தியத்தின் சின்னமாக விளங்கும் காங்கிரஸின் தலைவர்! புரிந்து கொள்வார்களா கம்யூனிஸ்டுகள்!

ஆ. மீ. அலிசேக் மன்சூர்

'திராவிடன்' சந்தா விவரம்

உள்நாடு

ஆண்டு சந்தா ...	ரூ. 8	0	0
ஆறுமாதம் ...	ரூ. 4	0	0
தனிப்பிரதி ...	ரூ. 0	3	0

வெளிநாடு

ஆண்டு சந்தா ...	ரூ. 9	0	0
ஆறு மாதம் ..	ரூ. 4	8	0
தனிப்பிரதி ...	ரூ. 0	3	6

டாக்டர் லோகியாவின்...தொடர்ச்சி

பின்னர்தான் அந்தந்த மாநிலங்களின் தகுதிக்கேற்ப தொழில் துறையில் பெருகி பொருளாதார வசதியும் சீர்பெற்று—மக்களின் வறுமையும் ஓரளவுதீர வழிவகை ஏற்படும்,

ஆக இவ்வித அடிப்படையான கொள்கைகளைக் கொண்ட கட்சிகளால்தான் நாட்டுக்கு நன்மை பயக்க முடியும்—இன்னும் சொல்லப் போனால் அனைத்திந்தியாவிலும் ஒரு மாநிலம் பிற மாநிலத்திற்கு அடிமைப்பட்டது—பின் தங்கியது என்ற அவல நிலை கூடுமானவரைஒழிக்கப்பட்டால்தான் அனைத்திந்தியாவின் ஒற்றுமையும் வலுப்பெற முடியும்,

எனவே டாக்டர் மனோகர் லோகியா தனிக்கட்சி யமைப்பதானாலும்—அல்லது பி. சோ. கட்சியை மராமத்து (திருத்தி அமைப்பது) செய்வதானாலும், இந்த நோக்கத்தை அஸ்திவாரமாகக் கொண்டு ஆவன செய்ய முன்வருவாரானால் உள்ளபடியே அவரது தொண்டும் வெற்றியுற முடியும். அதற்குபதிலாக அனைத்திந்திய மாடலிலேயே தனிக்கட்சி அமைக்க முயல்வாரானால் அவருக்கிப்போதுள்ள மனக்குழப்பம் இன்னும் வளருமேயன்றி உருவான காரியத்தை ஒன்றும் சாதித்துவிட முடியாது.

—நக்கீரன்

திருச்சியில் அறிஞர் அண்ணா அவர்களின் முழக்கம்

திருச்சியில் நடைபெற யிருக்கும் தி. மு. கழக மாநில மாநாட்டுக்காக திருச்சி மாவட்ட நிதி யளிப்பு நிகழ்ச்சியை யொட்டியும் பொதுச்செயலாளர் இரா.நெடுஞ்செழியன் அவர்களை வரவேற்கும் திருச்சி மாவட்ட கழக சார்பில் 19—6—55 ஞாயிறு மாலை டவுன்ஹால் முன் மாவட்டச் செயலாளர் அன்பில் தர்மலிங்கம் தலைமையில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அது போது மாவட்டத்தின் பங்கீட்டுத் தொகையில் முதலாவதாக ரூ. 1600 அறிஞர் அண்ணா அவர்களிடம் அளிக்கப்பட்டது. கூட்டத் துவக்கத்தில் தோழர்கள் கே. எ. மதியழகன், தில்லை வில்லாளன் ஆகியோர் பேசியபின் பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் பாராட்டுதலுக்கு நன்றி தெரிவித்துப் பேசினார்.

பிறகு அறிஞர் அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டதாவது:—

பெரியார் அவர்களுக்கும் காமராசருக்கும் இடையேயுள்ள பாசத்தையும் நேசத்தையும் பார்த்தவர்கள் இந்த வருஷம் ஆகஸ்டு மாதம் இந்தி எதிர்ப்புப் போர் நடத்துவாரோ, நடத்த மாட்டாரோ என்று சந்தேகப் பட்டிருந்தார்கள், அவர்களின் சந்தேகம் தீரும்படியாக காமராசரே எதிர்த்தாலும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தியே தீருவேன் என்று பெரியார் அறிவித்திருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன்.

எங்களுடைய தலைவர் எப்போதும் இப்படித்தான். அவரின் இலட்சியத்தில் உறுதியாக இருப்பார். அவருடைய உறுதியைமாற்றும் வேலையில் சிலர் ஈடுபடுவார்கள். அந்த சமயங்களிலும் இவ்வுறுதியிலிருந்து மாறுதிருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

ஒரு அரசியல் கட்சி பொதுவான அதுவும் முக்கியமான போராட்டம் ஒன்று ஆரம்பிக்கிறதென்றால், அதற்கு ஆதரவாக மற்ற அரசியல் கட்சிகளும் பங்குகொள்ளவேண்டியது அரசியல் பண்பாகும். பெரியார் ஆரம்பிக்கவிருக்கும் ஆகஸ்டு போராட்டத்தில் அந்த அரசியல் பண்புடன் கலந்துகொள்ள தி. மு. கழகத்தினராகிய நாங்களும் தயாராயிருக்கிறோம்.

ஆனால் போராட்டத்தில்கலந்து கொள்ள எல்லோரும் வாருங்கள் என பத்திரிகையில் எழுதுவதோ அல்லது மேடைகளில் பேசுவதோ பயன்தராது. அதைக் கண்டு நாங்கள் அப்போராட்டத்தில் கலந்து கொள்வதும் நாகரீகமல்ல

வாழை மரம் கட்டியிருக்கும் எல்லா வீடுகளுக்கும் நுழைய நாங்கள் என்ன பண்டாரங்களா? அல்லது பரதேசிகளா? திருமணத்திற்கு வா என்று அழைத்தால் தான் அந்த வீட்டுக்குள் நுழைவோம்.

அதுபோலவே போராட்டத்துக்கு வா என்று பொதுப்படையாக அழைக்காமல் எங்கள் பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் அவர்களை திராவிட கழகம் அழைத்து, நடத்தயிருக்கும் போராட்டம் குறித்து விவாதித்து ஒரு முடிவுக்கு வரட்டும். அதற்குப் பிறகுதான் பொதுச்செயலாளர், தனக்குப்பின் போர்ப்படை போல அணிவகுத்து நிற்கும்

எங்களை அழைத்துப் பணியாற்றச் செய்வவார்.

போராட்டம் எந்த முறையிலிருக்கும் என்பதை இப்பொழுது சொல்லமாட்டேன். அது ரகசியம்! ஆரம்பிக்கும் பொழுதுதான் சொல்லுவேன் என்று பெரியார் சொல்லுவதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. இது உண்மையாயின் அதற்காக வருந்துகிறேன். பெண்ணைப்பார்க்கவரும் மாப்பிள்ளை வீட்டாரிடம் பெண்ணைப் பார்க்கக் கூடாது என்று தடுப்பார்களானால் அது நியாயமென்றோ, சரி பெண்ணைப் பார்க்காமலேயே திருமணத்தை முடித்துவிடலாம் என்றோ விவரம் அறிந்தவர்கள் ஒப்புக்கொள்வார்களா? அதுபோலவே போராட்டத்தைப் பற்றி சொல்லமாட்டேன், ஆனால் எல்லா கட்சியினரும் ஒத்துழையுங்கள் என்று பெரியார் சொல்லுவதை ஒப்புக்கொள்ள முடியுமா என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள்,

போராட்டத் திட்டத்தை கூடுமானவரை மற்ற கட்சியினருக்காவது அறிவித்தால் தான் அவசியப்பட்டால் திருத்தவோ அல்லது அனைவரும் ஒரு முடிவான கருத்துக்கு வரவோ இயலும். இதனைப் பெரியாரவர்கள் கவனிப்பாரென்று நம்புகிறேன்.

என்மீதாகிலும் திராவிட கழகத் தோழர்களில் சிலருக்கு கோபமிருக்கலாம். ஆனால் தோழர் நெடுஞ்செழியன் மீது அந்த கோபத்திற்கும் இடமில்லை. எனவே திராவிட கழகத்தார் மனம் விட்டு விவாதிக்கட்டும், ஒரு முடிவான திட்டத்துக்கு வரட்டும்.

இவ்விதம் இருவரும் பேசி ஒரு முடிவுக்கு வந்தால், திருச்சியில் நடைபெற யிருக்கும் மாநில மாநாட்டைக் கூட ஒத்திவைத்துவிட்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பெரியாருடன் கலந்து கொள்ள நாங்கள் தயாராகயிருக்கிறோம் என அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

'நம்நாடு' இதழ்

மூன்றும் ஆண்டு துவக்க விழா

'நம் நாடு' இதழின் மூன்றும் ஆண்டு துவக்க நாளான 15-6-55 அன்று 'நம் நாடு' அலுவலகத் தோழர்கள் அறிஞர் அண்ணா அவர்களுக்குப் பாராட்டும், ஆசிரியர் நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பும் வழங்கினர்.

விழாவை ஒட்டி 'நம் நாடு'. அலுவலகமான 'அறிவகம்' கழகக் கொடிகளாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு அழகுடன் மிளிர்ந்தது.

துவக்கத்தில், அலுவலகத் தோழர்கள் அண்ணா ஆசிரியர் ஆகியோரிடமிருந்து புகைப்படம் பிடித்துக் கொண்டனர்.

பின்னர் இனியதொரு தேநீர்விருந்து நடத்தப்பட்டது.

ஒலிப்பதிவு செய்யப்பட்டு வழங்கப்பட்ட இன்னிசை தேநீர் விருந்தினைச் சிறப்பித்தது.

விருந்து முடிவுற்றதும் பாராட்டு, வரவேற்புவிழா துவங்கிற்று.

தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் அனைவரையும் வரவேற்று, விழாவினுக்குத் தலைமை தாங்கி நடத்தித் தருமாறு, அலுவலக நிர்வாகியான தோழர் அ. பொன்னம்பலனார் அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் அவர்கள் அதனை வழிமொழிந்ததும், தோழர் பொன்னம்பலனார் அவர்கள் தலைமை ஏற்று விழா குறித்து விளக்கம் தந்தார்.

பின், அண்ணா அவர்களுக்கும், நெடுஞ்செழியன், அவர்களுக்கும், தோழர்களின் மகிழ்ச்சி ஆரவாரப் பேரொலிக்கிடையே தலைவர் மலர்மாலை அணிவித்து, பாராட்டு, வரவேற்பு இதழ்களை வாசித்தளித்தார்.

அடுத்து தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

பின்னர், ஆசிரியர் நெடுஞ்செழியன் அவர்கள், தமக்குத் தரப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துச் சொற்பொழிவாற்றினார்.

அடுத்து, அண்ணா அவர்கள் சீரியதோர் கருத்துரை வழங்கினார்; தமக்குத் தரப்பட்ட பாராட்டுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்.

இறுதியாக தலைவர் முடிவுரை ஆற்றியதும், தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் நன்றி நவில விழா இனிது முடிவுற்றது.

விழா நிகழ்ச்சிகள் அத்தனையும் ஒலிப்பதிவு செய்யப்பட்டன.

விழாவிற்கு தோழர்கள் என். வி. நடராசன், எஸ். கசேந்திரன், கே. எம். கண்ணபிரான், இளம்பரிதி, எஸ். எஸ். பி. லிங்கம், கே. பி. சுந்தரம் ஆகியோர் வருகை தந்து சிறப்பித்தனர்.

திராவிடன் வாசகர்களுக்கு

வணக்கம், உங்களின் ஆதரவால் கடந்த எட்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து பணியாற்றிவரும் திராவிடன், ஆகஸ்டு 12-ந் தேதியிலிருந்து 9-வது ஆண்டைத் துவக்க யிருக்கிறான்.

திராவிடத்தின் உரிமைக்காக சகோதர பத்திரிகைகளுடன் சேர்ந்து தொண்டாற்றிவரும் திராவிடன் 9-வது ஆண்டு துவக்கத்திலிருந்து மேலும் புதிய அமைப்புகளுடன் தனது கடமையைச் செய்ய ஆவன செய்யப்பட்டு வருகிறது. மற்ற விவரங்கள் அனைத்தும் அடுத்து அறிவிக்கப்படும். எனவே திராவிடன் ஆற்றிவரும் பணி மேலும் சிறப்பிக்க வாசகர்களும் கழகத் தோழர்களும் தங்களின் பேராதரவைத் தருமாறு வேண்டிக் கொள்கிறோம்

—நிர்வாகி—'திராவிடன்'

புதுவையில் வட்டக் குழு அமைப்பு

26—6—55 காலை 9 மணிக்குப் புதுவைத் தி. மு. கழகத்தில், தெ. ஆ. மாவட்டச் செயலாளர் தோழர் இரா சாம்பசிவம் அவர்கள் முன்னிலையில் தி. மு. க. புதுவை வட்டக் குழு அமைக்கப்பெறும். அதுபோது, புதுவை அரசியல் தேர்தலில் தி. மு. க. நிலை பற்றி முடிவு செய்யப் படுவதோடு மாநில மாநாட்டு நன்கொடை நிதிக்காகப் புதுவை வட்டத்தின் பங்குத் தொகையும் தெ. ஆ. மாவட்டச் செயலாளரிடம் அளிக்கப்படும். ஆதலால் புதுவை வட்டத்திலுள்ள எல்லாக் கிளைகளின் செயலாளர்களும் புதுவைத் தி. மு. க செயற்குழுவினரும் அவசியம் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

ச. சிவப்பிரகாசம்
செயலாளர் தி. மு. க. புதுவை.

வ. ஆ. மாவட்ட தி. மு. கழகக் கிளைத் தோழர்களுக்கு

26-6-55 மாலை 6 மணிக்கு வேலூர் கோட்டை மைதானத்தில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்படும். அவ்விழாவில் கிளைக் கழகத் தோழர்களெல்லாரும் கலந்து கொண்டு விழாவினை சிறப்பிக்க வேண்டுகிறேன் என வ. ஆ. மாவட்டச் செயலாளர் தோழர் முல்லை சத்தி அறிவிக்கிறார்.

மதுரை மாவட்டக் கிளைக் கழகத்தோழர்களுக்கு

மாநில மாநாட்டு நிதி இம்மாதம் 20-ம் தேதிக்குள் கொடுக்கவேண்டுமென்று அறிக்கைகள் விட்டும் இருமுறை கடிதங்கள் எழுதியும் இதுவரை கொடுக்காதிருக்கிற கிளைக்கழகங்கள் உடனடியாக அனுப்பி வைக்க வேண்டுகிறேன். இப்பணியை உடனடியாகச் செய்யுமாறு வேண்டுகிறேன்.

எஸ். முத்து
மதுரை மாவட்டச் செயலாளர்

குடியேற்றம்

குடியேற்றம் மக்கள் மறுமலர்ச்சி மன்றத்தின் நிர்வாகக் குழு கூட்டம் தோழர் மணி இல்லத்தில் 12—6—55 அன்று சுமார் 7 மணியளவில் ஆரம்பமானது. கூட்டத்தில் 'மன்றம்' நகர தி. மு. க. வின் கிளையாக ஏற்றுக் கொண்ட மகிழ்ச்சியான செய்தி அறிவிக்கப்பட்டது. விரைவில் சந்தைப்பேட்டையில் மன்றத் திறப்பு விழாவை நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

10-6-55 தொடர்ச்சி

வந்த கதை:

சேகரும், பாலத்துவாசியும் மலைச்சாரலை நோக்கி நடைபோட்டுக் கொண்டிருந்தார்கள். கூந்தலிலே பூச்சரந் தாங்கிய வனஜா கூர்வாளை யொத்த கண்களை குருபியின் மேனியிலே பதித்து பூரித்திருந்தாள். சேகரின் இதய வெளியிலே அமைந்திருந்த இன்ப மாளிகையிலே—தீ...தீ......தீ!

35

நச்சுப் பையைத் தாங்கிய பாம்பு கூட மகுடியின் முன்னே மயங்கி மண்டியிட்டு விடுகிறது. பலசாலியான நிராயுதபாணிகூட எதிரியின் கூர்வாளைக் கண்டு நடுநடுங்குகிறான். பெரிய யானை சிறிய அங்குசத்திற்கு அடங்குகிறது. அந்த அச்ச உருவமாகத்தான் சேகரும் ஆகித்தீர்ந்தான்.

வாழ்விலே, தொழிலிலே பாலத்துவாசியைவிட ஒரு படி மேலான நிலையிலிருந்த சேகர் தான்—அவன் சுட்டுவிரல் காட்டிய திசையெல்லாம் திரும்பிப் பார்த்தான்! மலைச்சாரலின் ஓரத்துக்கு நடந்து போவதற்குள் 'பார்—அதோ பார்'...என்று ஆயிரம் முறை கூறிவிட்டான் பாலத்துவாசி. படபடத்த நெஞ்சை நடுநடுங்கிய கரத்தால் அமுத்திக்கொண்டே சேகர் நடந்தான்,

அந்தரத்திலே தொங்கியபெரிய நட்சத்திரம் மலையுச்சியின் கிரீடத்திலே வைரம் பதித்ததுபோலயிருந்தது. கனிரசக் கோப்பையை மலர்க் கரத்திலே தாங்கியிருந்தாள் வனஜா. பார்ப்பதற்குக் குரூரமாகவும் குள்ளமாகவும் இருந்த யாரோ ஒருவன் வனஜாவின் இடையோடு கரம் சேர்த்து இமைமூடி சாய்ந்து கிடந்தான்!... காலம் அவன் மேனியைத் தின்று தீர்த்ததோ என்னவோ—அவ்வளவு அவலட்சணமாகயிருந்தான். பாசமும் நேசமும் கொஞ்ச இடது கரத்தால் அவனைத் தடவிக் கொடுத்துக் கொண்டே வலது கரத்தில் தாங்கியிருந்த கனிரசக் கோப்பையை அவனது உதட்டருகே கொண்டு போனாள் வனஜா. நீக்ரோவின் உதடுகளைப் போலயிருந்த தடித்தஉதடுகளோ கோப்பையைக் கௌவிக்கொண்டன! கனிரசத்திலே ஒரு துளி மட்டும் சுவை பார்த்துவிட்டுக் கோப்பையை அவளின் வாயருகே கொண்டு போனான். மலர்ந்த அதரங்கள் கோப்பையிலே பதிந்தன. முத்துப் பற்களைக் காட்டி சிரித்தாள். அந்த மோகனம் கனிரசத்திலே நிழலாடியது!...

'அன்பே! இதோ பாருங்களேன்!'

'இன்பமே! எங்கே? எதைப் பார்க்க அழைக்கிறாய் அன்னமே!'

'பொன்னான மேனியென்று புகழ்வீர்களே என்னைப்பற்றி—என் அழகு நளினத்தைப்பற்றி... இந்தச் சிங்காரச் சித்திரத்துக்குப் போட்டியாக...இதோ இன்னொரு எழிலோவியம், காலத்தின் புதுக் காவியம்...இங்கே கனிரசக் கோப்பைக்குள்ளே!'

'போட்டியா? அதுவும் உனக்கா! இருக்கக் கூடாதே இந்த நிலை. தாஜ்மஹாலுக்கு முன்னே — இன்னொரு தாஜ் மஹால் இருக்கக்கூடாது! எல்லோராவுக்குக் கல்லறை கட்டிவிட்டு......இன்னொரு எல்லோராவா? என்னால் சகிக்க முடியாது எழிலரசி. சிரிப்பால் பேசும் சிங்காரி—பொன்னழகி — என்னரசி ...கொடு அந்தக் கோப்பையை போட்டிக்கு முடிவு கூறுகிறேன்'

...அவள் தந்தாள். கனிரசத்தைக் காலி செய்துவிட்டுப் பக்கத்திலிருந்த பாராங் கல்லிலே தூக்கி யெறிந்தான் கோப்பையை!

சேகரின் இதயத்திலே யாரோ உதைப்பதைப் போல யிருந்தது; கண்ணாடிக் கோப்பையோ சுக்கு நூறாகியது.

நீண்ட சிரிப்புக்குப் பின் அந்தக் குரூபி பேசினான்.

'போட்டியின் முடிவைப் பார்த்தாயா?

...பயங்கரச் சிரிப்பை முழக்கிக் கொண்டே அவளை நெருங்கினான் காலக் கல்லடிபட்ட அந்த பரிதாபத்திற்குரியவன்!

சிரித்த முகத்துக்குப் பரிசு தந்தாள் வனஜா! அந்த ரசாபாசமான காட்சியைக் கண்டபோது சேகரின் உள்ளத்திலே பிளவு கண்டது. யாரை வாழ்வின் திருவிளக்கு என்று நம்பியிருந்தானோ அவளே, குரூபியின் இருண்ட இதயத்திலே ஒளிஏற்றிக் கொண்டிருப்பதை பிறர் கூறியல்ல...... அவனாகவே பார்த்தான்! எச்சில் படுத்தித் தந்த கனிரசத்தை அவள் பருகியபோதும்: அந்தக் குரூபியின் கட்டையான விரல்கள் ரோஜாக் கன்னத்தைத் தடவி இன்பவீணை மீட்டியபோதும்... இதயபூர்வமாக வனஜா இன்புற்றிருக்கத்தான் செய்தாள். துரோகியோ, துராத்மாவோ தூக்கி வந்து மலைச் சாரலிலே நிறுத்திக் கொண்டுவிபசாரத்துக்குப் பேரம் பேசவில்லை. ஊடலல்ல அங்கே நடந்தது — கூடல்தான்! தேன் சுவைக் கனியென எண்ணி யிருந்தான் சேகர். அது விஷக்கனியென்பது இப்போதுதான் புரிந்தது அவனுக்கு. அவன் ஆயிரம் முறை தடவிக் கொடுத்துப் புகழ்ந்த அந்த மயில் கழுத்து இப்போது குரூபியின் மடியிலே கிடந்தது. ஓடோடி ஒரே நொடியில் சேகரின் படபடத்த இரும்புக் கரத்துக்குள்ளே மயில் கழுத்தை சிறை பிடிக்கத் துடித்தது...மான உணர்ச்சி! உணர்ச்சியின் நரம்புகளைத் தளர்த்திக் கொண்டிருந்தான் பாலத்து வாசி. லயம் குறைந்தது!

'சேகர் — நல்லதென்று நம்பினாயே! நயவஞ்சகத்தை, உன் முன் வேஷம் போட்டு ஆடிய நாசத்தை வந்து பார்......... என்றுதான் கூறி அழைத்தேனே தவிர நாசத்தோடு போராட நானுன்னை அழைத்து வரவில்லை இங்கே! உன் இதயத்தில் கோயிலெடுத்தாயே அந்தச் சிலையை உடைத்து விடு அது போதும்' ஆயிரம்முறை வேலாலோ சொல்லாலோ நீ தாக்கினாலும் இழுக்கு அந்த இழிநிலையிலே மிதந்து கொண்டிருப்பவர் களுக்கல்ல — உனக்குத்தான்—ஏன் எனக்குந் தான்! நாம் போகும் பாதை—எதிர்நோக்கியல்ல...இதோ பின்னோக்கி'.

"ஆமாம்! இனி பின்னோக்கித் தான் செல்லவேண்டும். எனது பாதை அதுவல்ல! இதோ திரும்பிப் போகிறேன்...கல்லடி பட்டுத் திரும்பும் வெறிநாயைப் போல. துள்ளிக் குதிக்கும் உள்ளத்தோடு வந்தேன், அள்ளிக் கொட்டிய நெருப்பு இதோ நெஞ்சிலே! தாங்க முடியாத தாக்குதல், எவனுக்காக வாழ்கிறேன் உயிரோடு...என்று அழுதழுது கூறினாளோ அவனின் முன்னரேயே......காமக்களியாட்டம் நடத்துகிறாள். எச்சில் கனிரசத்தை 'இச்'என்ற ஒலிதொடர சுவைத்துக்களிக்கிறாளே! இவளா என் பொன்னோவியம். காலத்தேவன் என் இதயத்திலே இந்த கேடுகெட்ட சித்திரத்தையா தீட்டவேண்டும்? நான் கை கொடுக்காவிட்டால் முக்காட்டு முகா முக்கே ஓடிவிடுவேனென்று 'சத்தியம்' கூறிப் பெசினாளே...இப்போது முழுமதி முகங்காட்டும் நேரத்திலே முல்லைச் சிரிப்பைச் சிந்தி குளிர்ந்துபோயிருக்கிறாள்.

அது அவள் தவறல்ல சேகர்! அவள் விபசாரம் செய்வது காசுக்கா? இல்லை...அவளின் ஊதியமே அவளுக்குப் போதும். ஆனால் இதயவெறி...? அந்த வெறிக் கோலத்தைத்தான் இப்போது பார்த்தாய்! எனவேதான் குரூபியும் குள்ள உருவத்தினனும் கூட மலர்க் கரத்துக்குள்ளே சிறைப் பட்டுவிடுகிறான். மலர் கிடைத்ததிலே அவனுக்கு திருப்தி. மன வெறி அடங்கியதிலே அவளுக்கு மகிழ்ச்சி, இந்தக் கதை முடியாத காரணத்தால்தான் ... புதுப்புது அத்தியாயங்களை தொகுத்துக் கொண்டு வளர்ந்துகொண்டே போகிறது.

அந்த அக்ரம அத்தியாயத்துக்கு நானே முடிவு கட்டியிருப்பேன். தடுத்துவிட்டாயே!...

அவர்கள் பேசிக் கொண்டே பாதையிலே நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். வீட்டு விட்டு மலைச்சாரலின் அருகிலிருந்து கேட்டுக்கொண்டிருந்தசிரிப்பொலி மட்டும் தேயவேயில்லை!

(நின்றுவிடவில்லை)

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ் : **26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதராஸ்-1**
பார்சல் ஆபீஸ் : **148, தங்கசாலைத் தெரு, சென்னை-1**



மதராஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்.

N. B :—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ்: 8, கீழ ஆவணி மூலவீதி, பழைய ராயல் ஓட்டல், மதுரை
,, 103-1/127 பழனி ரோடு, திண்டுக்கல்
,, கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்
,, வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

பாராட்டு விழா

9—6—55 அன்று காலை தோழர் அருணாசலம் தோழியர் பத்திரகாளி அம்மை ஆகியோருக்கு தூத்துக்குடியில் நடைபெற்ற திருமணத்தை யொட்டி, சென்னை மூலக்கடை கௌரி விலாஸ் மாடியில் 17—6—55 மாலை 6-30 மணிக்கு லக்ஷ்மி தியேட்டர் உரிமையாளர் தோழர் லக்ஷ்மணன் தலைமையில் பாராட்டுவிழா நடைபெற்றது.

மணமக்களைப் பாராட்டி தோழர்கள் மு.கிருட்டிணமூர்த்தி, மதிவாணன் ஆகியோர் பேசினர். மணமக்களுக்கு பரிசுகளும் வாழ்த்துரைகளும் வழங்கப்பட்டன. மணமக்கள் சார்பாக தேநீர் விருந்து நடைபெற்றது.

இதன் நினைவாக திராவிடன் வளர்ச்சிக்கு ரூபாய் ஒன்று அளிக்கப்பட்டது. வரப் பெற்றோம் — நன்றி — நிர்வாகி 'திராவிடன்'.

20

பொருளாதார நிலை

ஒரு சமூகத்தாருக்கும், இன்னொரு சமூகத்தாருக்கும் இடையில், பொருளாதார வித்தியாசம் இருந்துதான் தீரவேண்டும்—அப்போதுதான் தனி உரிமை—தனி நாடு என்கிற பிரச்னை எழும் என்பதல்ல. ஆனால் அத்தகைய வித்தியாசம் இருந்துவிட்டாலோ, அதைவிட வேற்றுமை தரக்கூடிய நிலை வேறொன்றும் இல்லை என்றே கூறலாம்.

தற்கால உலகத்தின் பொருளாதார நிலை பண்டைக் காலத்தைப் போலக் கருதக் கூடியதாயில்லை. பண்டைக் கால மனிதன் பொருளாதாரத்தை ஒரு தத்துவமாகக் கற்றுக் கொண்டிருக்கவில்லை. அது, பெரிதும் இயற்கையின் வசத்திலேயே இருந்து வந்தது.

அன்று, நீர்வளமும் நிலவளமும், உள்ள இடங்களில் மக்கள் செழித்து வாழ்ந்தனர். அவ்வித இடங்களில் வாழாதவரெல்லாம் வறுமையில் உழன்றனர், மிகுந்த பஞ்சம் ஏற்பட்டபோது நீர்வளமும், நிலவளமும் உள்ள இடங்களுக்குச் சென்று குடியேறினர்.

அக்காலத்தில், விஞ்ஞான சாதனங்களும், பொருளாதார தத்துவங்களும், வளர்ச்சி பெறாததால், நிலையான மூலதனங்களும் தொழில் நிறுவனங்களும் ஏற்படவில்லை. அன்று நிலமும் நீருமே மூலதனம். எனவே "உழைக்கத் திறனுள்ளவர் பிழைக்க முடியும்" என்கிற நம்பிக்கை இருந்தது. 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்கிற எண்ணங்கள் தாராளமாக அரும்பின!

அன்று, மனிதனுடைய போக போக்கிய உணர்ச்சிகளும் மிக மிகக் குறைந்த அளவிலேயே இருந்தது. அதனால், உணவு உடை தேடுவதைவிடப் பெருத்த வாழ்க்கைச் செலவு அவனுக்கு ஒன்றுமில்லை.

இன்றைய நிலை அவ்வாறில்லை. இன்று மனிதனுடைய வாழ்க்கையில் உணவு உடைகளைவிட போக போக்கியச் செலவுகளே அதிகமாகி வருகிறது. அவைகள் அனைத்தையும் உற்பத்தி செய்ய ஆலைகள் வளருகின்றன.

அதனால், உணவு உடை தயாரிப்போரை விட போக போக்கியப் பொருள்கள் தயாரிப்போரின் எண்ணிக்கை பன்மடங்காகி வருகிறது. அதுபோலவே, உணவு உடை தயாரிக்கும் சாதனங்களைவிட, போக போக்கியங்களை தயாரிக்கும் சாதனங்கள் பெருகி வருகின்றன.

இந்தப் போக போக்கிய உணர்ச்சி அதிகரித்துவிட்டதால் வாழ்க்கையே ஒரு 'போட்டி' நிலை பெற்றுவிட்டது. இந்தப் போட்டியில் நடுநீதி வழங்க வேண்டிய அரசாங்கம் ஒரு சாராரின் ஏகபோக ஆதிக்கத்தில் இருக்குமானால் நிலைமை எப்படி இருக்குமென்று சொல்லவும் வேண்டுமா?

ஆதலால் இன்றைய நாட்டின் பொருளாதார நிலையை ஆராய்வோர், யந்திர சாதனம், மூலதனம் இவைகளைப் புறக்கணித்துவிட்டு முன்போல நீர் வளத்தையும். நிலவளத்தையும் கொண்டு பொருளாதார நிலையைக் கணிக்க முடியாது.

இன்றைய பொருளாதாரத்தில் ஆலைகளின் வளர்ச்சி முதலிடம் பெறுகின்றது. ஆலைகளுக்கு மூலதனம முக்கியமாகிறது. மூலதனம். பண்டைக் காலத்தைப் போல ஒருகிரகாச்சாரத்தினால் வளர்ந்துஇன்னொரு கிரகாச்சாரத்தால் அழியும் என்கிற குருட்டுத்தனம் கொண்டதாக இல்லை.

வாரகுலையை இரயில் வண்டி வென்றிருப்பதுபோல், விஞ்ஞானம், சகல கிரகாச்சாரங்களையும் வென்றுவிட்டது. உலகத்தின் தூரம் பெரிதும் நெருங்கியதால் 'நாளை நடப்பதை யாரறிவார்' என்கிற வேதாந்தம் வெற்றுச் சொல் ஆகிவிட்டது. மூலதனமிட்டவர்கள் நிலையான செலவந்தராக இருக்கும்படி விஞ்ஞானம் பணிபுரிகிறது. அரசாங்கம் பாதுகாப்பு அளிக்கிறது. வெறும் ஜனநாயக அரசியலில், நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஆலை வேந்தர்களே ஆதிக்கம் செலுத்துவோராக இருக்கின்றனர்.

பல்வேறு சமுதாயங்களை இணைத்த ஜனநாயக சமஷ்டியில், ஆலை வேந்தர்களின் சமூகம் ஆளும் சமூகமாகவும் இதர சமூகங்கள் குடிகளாகவும், உழைத்துப் பிழைப்போராகவும், வறுமை விளையும் கழனியாகவும் காட்சி தருகிறார்கள்! இதற்குச் சான்றாக அமெரிக்கா, கானடா, தென் ஆப்ரிக்கா ஆஸ்திரேலியா, முதலிய நாடுகள் இருக்கின்றன. அங்கெல்லாம் ஒரு சாரார் ஆள்வோராகவும், இன்னொரு சாரார் ஆழ்த்தப்பட்டோராகவும் இருக்கின்றனர்.

இந்தியா போன்ற முரண்பட்ட சமுதாயங்களை இணைத்துக் கொண்டிருப்பதே மேற்கண்ட நாடுகள் அனைத்தும்! அங்கெல்லாம் எத்தகைய சமதர்ம அரசாங்கம் ஏற்பட்டாலும் ஆதிக்கம் ஒரு சாரார்கையில் தான் இருந்து வரும் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது!

இந்தியாவிலும் கடந்த 8 ஆண்டு ஆட்சி இதே அனுபவத்தைத்தான் கொடுத்திருக்கிறது! திராவிடர் போன்ற அறியாமையும் வறுமையும் கொண்ட மக்களை உல்லாசப் படகுகளாக்கி துயரக் கடலில் மிதக்கவிட்டு ஏறி உலவுகிறார்கள் வடநாட்டு ஆலை வேந்தர்கள்!

அரை நூற்றாண்டுக்கு முன்னால்வரையிலும் வட இந்தியாவும், தென்னிந்தியாவும் பொருளாதாரத் துறையில் சமமாகவே இருந்தன. நீர்வளம், நிலவளம், தொழில் வளம், வாணிக வளம் ஆகிய எல்லா வளங்களும் அங்கும் இங்கும் ஒரே தன்மையில் இருந்தன. மிகக் குறுகிய காலத்திற்குள் வடஇந்தியாவில் தொழிலும் வாணிகமும் எட்டிப் பிடிக்க முடியாத உயரத்தில் முன்னேறி விட்டன!

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே வடவர்கள் தொழிலிலும் வாணிகத்திலும் ஆங்கிலேயரைப் போட்டியிட்டு வளர்ந்திருக்கிறார்கள். கடந்த இரண்டு உலக யுத்தங்களில், வடவர்கள், பண மலையே குவித்து விட்டார்கள் என்று கூறலாம், போதாக் குறைக்கு முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலமாக ரூ. 2000 கோடிக்கு மேல் வடஇந்தியாவின் விவசாய வளத்திற்காகவும், தொழில்வளத்திற்காகவும், செலவு செய்துவிட்டு தென்னிந்தியாவின் முகத்தில் பட்டையாக நாமம் தீட்டிவிட்டார்கள்!

அந்த ரூபாய் 2000 கோடியும், இந்தியா முழுவதையும் அடமானம் வைத்து வாங்கியதாகும். அதனை வடக்கே ஒரு சாரார் முன்னேற்றத்திற்காக—அதிலும், வாடிக் கிடப்பவர் கிடக்க, வளம் படைத்தவரின் முன்னேற்றத்திற்காக செலவு செய்வதென்றால் இதைவிட அநீதி—கொடுமை என்ன இருக்க முடியும்?

அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்கெல்லாம் ஈடாக தெற்கில் செலவழித்தாலும்கூட, வடவர்களுக்குக் கிடைத்த ஐந்து ஆண்டு முன்கூட்டிய வளர்ச்சி திராவிடரால் போட்டியிட முடியாத அளவில்தான் இருக்கும்!

வட இந்தியாவின் ஆலைப்பெருக்கம்' தொழில் முன்னேற்றம், மூலதனம் ஆகியவைபற்றி, அறிஞர் அண்ணா அவர்கள் 'பணத்தோட்டம்' என்கிற பெயரால் ஒரு நூல் வெளியிட்டார்கள். ஆனால், அந்த நூல் பூரணமானதல்ல—வடக்கின் வளர்ச்சியை ஓரளவுதான் எடுத்துக் காட்டக் கூடியதாக இருக்கிறது. ஆயினும் அது, நம் போன்றவரை திகிலடையச் செய்யப் போதுமானதாயிருக்கிறது. இன்னும் இருக்கின்ற புள்ளி விவரங்களை பூரணமாக' வெளியிட்டால் தென்னாட்டான் மூர்ச்சையாகி விடுவான்! அந்த அளவுக்கு வடக்கு முன்னேறி யிருக்கிறது! அந்த விவரங்களை இங்கு கூறிக் கொண்டிருந்தால் மன்றொன்று விரித்த குற்றமாக முடியும். எனவே, கூறாது விடுகின்றோம்.

ஆதியில், ஆங்கில ஏகாதிபத்யத்தை எதிர்த்த காங்கிரஸ்காரர்கள், ஆங்கிலேயர்களின் பொருளாதாரச் சுரண்டல்களை எந்த அளவ திட்ட நுட்பமாக எடுத்துக் கூற முடியுமோ, அந்த அளவுக்குக் கூறினார்கள். சோப்பு சீப்பு கண்ணாடிவரை இறக்குமதி செய்வதெல்லாம் வர்ணித்தார்கள். அவற்றில் குறிப்பிடத் தக்கது மாஞ்செஸ்டர், இலங்காஷயர், கிளாஸ்கோ முதலான அந்நிய ஆலைத்துணி வணிகம்!

இன்று. மாஞ்செஸ்டர், இலங்காஷயர், கிளாஸ்கோ இருந்த இடத்தில் பம்பாய், ஆமதாபாத், இந்தூர், சூரத், இப்படிப் பல இருக்கின்றன. "வாயால் பேசுவது குடிசைத் தொழில், கையால் செய்வது ஆலைத் தொழில்" என்பதே வடநாட்டுக் காங்கிரஸின் கொள்கை!

ஆலைகள், அவர்களிடம்! அயல் நாட்டு வாணிகம் அவர்களிடம்! முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் பயனாக இனிமேல் விவசாயமும் அவர்களிடம்! அத்தனையையும் ஆதரிக்க, வளர்க்க, பாதுகாக்க, பலங்கொண்ட அரசாங்கம் அவர்களிடம்! தென்னாட்டானுக்கு என்ன இருக்கிறது?

தென்னாட்டின் மிகப் பெரும் குடிசைத் தொழிலான கைநெசவுத் தொழில் பம்பாய் ஆமதாபாத் ஆலைகளால் அழிந்து வருகிறது தென்னாட்டு விவசாயமும் இனி அழிவை நோக்கிச் செல்ல வேண்டியதுதான்! காரணம் ஐந்தாண்டுத் திட்டத்தால் வடக்கில் ஏற்படும் அபரிமிதமான விவசாயப் பெருக்கமே! இனிமேல் தென்னாட்டான் என்ன செய்யப் போகிறான்? மண் வெட்டுதல், மரம் பிளத்தல், குப்பை சுமத்தல் கூலிவேலை செய்தல் கக்கூசு எடுத்தல் முதலான தொழிலுக்காக இந்தியா பூராவும் தென்னாட்டான்தான் தேவைப்படுவான்! இப்போது இருக்கும் அரசியல் அமைப்பு நிலைபெற்றால் வருங் காலத் திராவிடரின் கதி இதுதான்.

இன்றிலிருந்து திராவிடம் தனியாகி முன்னேற முயன்றாலும். இன்றைய வடநாட்டு முன்னேற்றத்தின் அளவுக்கு வர இன்னும் 100 ஆண்டுகள் ஆகும்! அதற்குள் வடவர்கள் அமெரிக்காவின் முன்னேற்றத்தை எட்டிப் பிடித்து விடுவர்! இப்போது உள்ள வடவர் ஆட்சியில் தென்னாடு நீடிக்குமானால், திராவிடர்கள் ஒருவர் போன வழியில் ஒருவர் போகாமல் திசைக்குக் கொஞ்சமாகச் சிதைந்து விடுவர்! அந்த நிலைமைக்

'கும்பமேளா குழு!'

கல்வி துறையிலும் கட்சிப் பாகுபாடா?

இந்திகமிஷனில் தென்னாட்டு கல்வி நிபுணர்கள் இடம்பெறாததேன்?

ஆசிரியர் போத்தன் ஜோசப் அவர்களின் சாட்டை.

மூலம் : போத்தன் ஜோசப் தமிழாக்கம் : ஏ. டி. பிரான்சிஸ், பெங்களூர்

முன்னுரை:— கும்பமேளா குழு! இந்தி கமிஷனை இப்படி வர்ணிக்கிறார் 'போத்தன் ஜோசப்' அரசியல் எழுத்தாளர்களிலே தனிப்பட்ட செல்வாக்கை பெற்றுள்ள தென்னவர் போத்தன். அவர் தற்போதுள்ள இந்தி கமிஷனை நகையாடுகிறார், ஆனாலும் தி. மு. க. உறுப்பினரல்ல. தேசிய மொழிப் பிரச்னையை நேர்மையான சிந்தனையோடு ஆராய்வோர் எவருமே தி மு கழகத்தினுடைய கருத்திற்குத்தான் வந்து தீரவேண்டி யிருக்கிறது என்பதற்கு மறுக்க முடியாத சான்றுவார். இந்தி ஏகாதிபத்தியத்தை எதிர்த்து கர்நாடகத்திலே போர்முழக்கம் செய்யும் மலையாளி அவர். இந்தியைப் பற்றி திராவிடர்களின் இதயங்களில் தோன்றுகின்ற எண்ணங்கள் நமது இலட்சிய கருத்திற்கு மாறுபட்டிருக்க முடியாதென்பதற்கும் அவர் வழங்கி வரும் தினத்தாள் டெக்கான்—ஹெரால்டு ஆணித்தரமான எடுத்துக்காட்டு.

*

கும்பமேளா குழு அமைக்கப்பட்டு விட்டது! இந்தியாவெங்கும் இந்தியை திணிப்பதற்கு திட்டங்களை தீட்டுவதற்கான ஆராய்ச்சிகளைச் செய்வதற்கு இந்தியாவின் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருக்கிறது. 15 ஆண்டுகளிலே பாரதமெங்கும் ஆட்சி பீடத்தில் இந்தி நிலையாக அமர்த்தப்பட வேண்டும் என்று நிர்ப்பந்திக்கின்ற அரசியல் சட்டத்தை அபாயகரமான பயங்கர விளைவுகளை ஏற்படவாய்ப்பளிக்கின்ற அச்சட்டத்தை அமுல் நடத்தியாக வேண்டும் என்ற உட்கருத்தோடு இந்தி கமிஷன் அமைத்துள்ளனர். அக்குழுவின் உதவியைக் கொண்டு பல்வேறு மொழிகளின் உயர்ந்த நிலையை பாதிக்காத வகையிலும், கலாச்சார ரீதியில் வெறுப்புகள் ஏற்படாத வகையிலும் இந்தியை நுழைக்கத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது.

15 ஆண்டுகளில் இந்தி தேசியமொழியாக மாற்றப்பட்டுத்தானாக வேண்டுமென்ற எதேச்சாதிகார சட்டத்தை, ஜனாதிபதி தனது செல்வாக்கைக் கொண்டு மாற்றியிருக்கலாம். அப்படி மாற்றா விட்டால் மக்களிடையே சுதந்திர உணர்ச்சி பாழ்பட்டுப் போவதுடன் ஏக இந்தியா என்ற கட்டுப்பாடும் தகர்ந்துவிடும். அசாமி, பெங்காளி, குஜராத்தி, இந்தி, கன்னடம், காஷ்மீரி, மலையாளம், மராத்தி, ஒரியா, பஞ்சாபி, சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, உருது ஆகிய 14 மொழிகளும் இந்தியாவின் பெரும் மொழிகளென்று அரசியல்சட்டம் அங்கீகாரம் அளித்துள்ளது. சட்டங்கள் அமுல் நடத்தப்பட்டு ஐந்தாண்டுகளுக்குப் பிறகு மேற்கூறிய மொழிகளிலிருந்து பிரதிநிதிகளைக் கொண்ட ஆய்வுக் குழுவின் துணை கொண்டு மொழிப் பிரச்னை ஆராயப் படவேண்டுமென்று 344 வது சட்டம் விவரிக்கின்றது.

அதன் பின்னர் பத்தாண்டுகளுக்கு ஓர்முறை மேற்கண்டவாறே பிரதிநிதிகளைக் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டு இந்தியை அரசாங்க அலுவல்களில் எளிதில் புகுவதெப்படி என்றும் பரிசீலித்து திட்டங்கள் வகுக்கப்பட வேண்டுமென்றும் அரசியல் சட்டம் கூறுகிறது' அந்த ஆய்வுக் குழுவின் அறிவுரையை கையாளுவதன் மூலமே ஆங்கிலத்தை நீக்க வேண்டுமென்றும் எண்களைப் பற்றிய கணித முறையை அக்குழுவில் தீர விவாதித்து அதன்பின்னரே செயலாற்ற வேண்டுமென்றும் அதே சட்டத்தின் 'பி' பிரிவு குறிப்பிடுகிறது. இங்ஙனம் நியமிக்கப்படுகின்ற குழு நாடெங்கும் சுற்றி வந்து நிலைமைகளை உள்ளவாறு தெரிந்து கொண்டு அதன் பின்னரே மொழிப் பிரச்னையைப் பற்றி ஆராய்வதில் ஈடுபட வேண்டுமென்று அச்சட்டத்தின் கிளைக்குறிப்புகள் தெரியப்படுத்துகின்றன.

அரசியல் ஊழியர் பரீட்சையில் இந்தியைக் கட்டாய பாடமாக திணிப்பதைக் குறித்து ராஜாஜி தெரிவிப்படுத்திய கவலையைப் போக்க எண்ணி, மத்திய சர்க்கார் உள்நாட்டு விவகார மந்திரி தென்னிந்தியர்கட்கு பாரபட்சம் காட்டாமலிருக்கப் போவதாக உறுதியளித்து ராஜாஜிக்கு கடிதமெழுதியுள்ளார். ஆனால் உண்மையிலே அந்த நல்லெண்ணம் அவருக்கு இருந்திருந்தால் எதேச்சாதிகாரமாக வகுக்கப்பட்டிருக்கும் சட்டத்தையல்லவா அவர் மாற்ற முனைந்திருக்க வேண்டும்! இந்தியைப் புகுத்த வேண்டுமென்ற ஆர்வத்தில் இந்தி வெறியர்கள் ஏகாதிபத்திய வெறியோடு நடந்து கொள்வதையல்லவா தடுத்திருக்க வேண்டும். மொழிப் பிரச்னைகட்கு அவற்றிற்கு தேவைப்படும் கால அளவை குறைக்கமுயலாமல் மாறுபாடுகளை காலப்போக்கில் சகிப்புத்தன்மையுடன் ஏற்படுத்தி பாரபட்சமின்றி செயலாற்றுவதே ஜனநாயகமாகும்.

அத்தகைய பண்பட்ட முறைகளைத் தழுவினால்தான் நாம் பெற்றிருப்பதாக சொல்லப்படும் சுதந்திரத்தை காப்பாற்றிக்கொள்ள முடியும். காலப்போக்கில் பல்வேறு மொழிகளிலிருந்து சொற்களை கடன் வாங்கி 'கங்கை தனது உப நதிகளால் சிறப்படைகிறது' என்று கிண்டலாகப் பேசப்படுவதுபோல் இந்தியும் சிறப்படையலாம்.

அரசு கட்டிலில் இந்தி ஏற்றப்படுவதைப்பற்றி இந்தி பேசாத மக்கள் என்ன கருதுகிறார்கள் என்றும், அவர்களுடைய உரிமைக்குரல் யாதென்றும் அறியும்படி இந்தி கமிஷனுக்கு கூறப்பட்டிருக்கிறது. நாம் கேட்பதெல்லாம் உரிமைக்குரல் என்ற சொல்லை அவர்கள் எந்த பொருளில் உபயோகிக்கிறார்கள் என்பதுதான். நடைமுறைக்கு சாத்தியப்படாத திட்டங்களை அமுல் நடத்திக் கொண்டே, உரிமைக்குரலை கவனிப்போம் என்று சமாதானங் கூறுவது நியாயமாகுமா? அரசாங்க ஊழியர்களாக விரும்புகிறவர்கள் சகிப்புத் தன்மையுடனும் தியாக உணர்ச்சியுடனும் இந்தியை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றால் உரிமைக்குரலுக்கு மதிப்பளிக்கப்பட்டிருக்கின்றது என்று பொருள்! அரசாங்க ஊழியம் என்பது தியாகத்தைப் புலப்படுத்த வேண்டிய இடங்களல்ல. அவை வெறும் ஊழியம் தானே என்று அசிரத்தையாக இருந்து விடவும் இயலாது. நாட்டை ஆளுகின்ற முக்கிய பீடங்கள் அவை, பொறுப்பு வாய்ந்த பதவிகள் அவை; ஐந்தாண்டு திட்டங்கள் முதலிய திட்டங்களை தீட்டுவதற்கான ஸ்தாபனங்களின் பதவிகள் அவை. அத்தகைய பதவிகளை இழந்து விடுவதற்கு தியாகம் என்று அர்த்தம்!

தற்போது இந்தி கமிஷனில் நியமிக்கப்பட்டிருப்போர் எந்த முன்னேற்றத்திற்கான தீர்மானங்களையும் நிறைவேற்றமாட்டார்கள்; பதிலாக, அழிவுப் பாதையை நோக்கித்தான் முன்னேறுவார்கள். ஏனென்றால் அவர்கள் கட்சி சார்பு கொண்டு பிரச்னைகளை அலசுகின்ற தீவிரவாதிகள்; தமது கட்சிக்கட்டுப் பாடுகளுக்கு சரணடைந்துள்ள மனப்பான்மை யுடையவர்கள். இந்தி திணிப்பு வியாபார ரீதியில் மேற்கொள்ளப்படுகின்றது. கமிஷனில் உள்ளோர் இந்தி வியாபாரிகளாக பணியாற்றுவதற்காக நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்தியை நல்ல முறையில் பண்படுத்த விரும்புகிறவர்களைக் குழுவில் சேர்த்துக் கொள்வதுதான் கண்ணியமாகும். அவர்கள்தான் நேர்மையாக ஆராய்ந்து முடிவெடுப்பார்கள், அம்முடிவுகளுக் கேற்ப செயலாற்றுவார்கள். ஆனால் தற்போது நியமிக்கப்பட்டிருக்கும் குழுவில் கலந்தி யிருக்கும் தென்னவர் சார்பில் திரு சத்தியநாராயணனையும், பண்டிட் பாலகிருஷ்ணசர்மாவையும் பிரதிநிதிகளாகக் கொண்டிருப்பது வஞ்சகமற்ற செயலென்று எப்படி கூறமுடியும்!

திரு சத்தியநாராயணன் சேர்க்கப்பட்டதற்கு வேறு தனிப்பட்ட காரணங்களிருக்கின்றன. அடுத்து அக்குழுவில் இணைக்கப்பட்டிருக்கும் டாக்டர் பி. சுப்பராயன் தமிழிலோ அல்லது இந்தியிலோ பாண்டித்யம் பெற்றவரல்ல. திரு எம். அனந்தசயனம் ஐயங்கார் ஒரு சிதளூர்வாசி என்பதுமட்டுமல்ல, கற்றவர்கள் மொழிப் பிரச்னையை ஆராய்கின்ற முறையில் ஆராயும் தகுதியுள்ளவரா என்பது யோசிக்க வேண்டியதாகும். இந்தியை விரைவில் தேசியத் தன்மைக்கு இழுத்துவந்து முன்னணியில் நிறுத்திவிட வேண்டுமென்ற நோக்கத்தோடு இவ்வாறு பல திறப்பட்டவர்களை கும்பலாகக் கூட்டி குழு அமைத்துள்ளனர். தென்னாட்டுக் கல்வித்துறையிலிருந்து நிபுணர்கள் எவரும் ஏற்கப்படவில்லை. தென்னாட்டு பிரதிநிதிகளாக் திட்டவட்டமான முடிவெடுப்பதற்கு போதிய அறிவு கொண்டவர்களோ அல்லது நடைமுறையில் அனுசரிப்பதற்கு தகுந்த திட்டங்களை தக்கமுறையில் மறுக்கலாகாத வண்ணம் தீட்டுவதற்கு அறிவுரை வழங்குவதற்கான அனுபவம் பெற்றவர்களோ குழுவில் சேர்க்கப்படவில்லை.

அக்குழுவிலுள்ள பாலகிருஷ்ணன் இந்தி கவிதைகள் புனைவதாகக் கருதப்படுகிறது. அவர் இந்திப் பிரச்னையை அலசும்போது ஓரவஞ்சனையின்றி அலசுவார் என்று கூறமுடியவது. இந்திக்கு ஆதரவாகவே முடிவெடுப்பார், நேர்மையான கருத்து இந்திக்கு இசைவாக இருக்கவில்லை என்றால் அக்கருத்துக்கு சிறிது பாதகமாகவே தனது கருத்தை வழங்குவார் என்றும் கருத இடமிருக்கிறது. அவரை டெல்லி அரசியல்வாதி என்று பெருமையாகப் பேசுகிறார்கள், ஆனால் அவர் உத்திர பிரதேசத்தில் தான் தலைவர். அரசியல் தியாகி என்ற பெயரிலே ஒருவேளை டெல்லியில் தியாகி நிலத்தை அவர் பெற்றிருக்கலாம், ஆனால் அவரை டெல்லிவாலா என்று கூறிடமுடியுமா! டெல்லி மக்கள் அப்படி கூறுவதற்கு ஒப்புக்கொள்வார்களா!

அடுத்து சர்மா முன்னாள் ஜனசங்கத்தில் தீவிரவாதியாகப் பணியாற்றியவர், இந்திக்கு ஆக்கந் தேடுவதில் மகா சூரர்! 'மதராசிகள்' என்றாலே நேர்மையான கண்ணோட்டங் கொள்ளாதவர். இந்த குழுவில் சில வழக்கறிஞர்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றார்கள். கேர் தலைமையில் பணியாற்றும்படி நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற அந்த ஆய்வுக்குழு தனது முடிவுகளை அரசாங்கத்துக்கு சமர்ப்பிக்கும்வரை எந்தவகை குழப்பத்தையும் உண்டாகக் கூடாது என்று அறிவுரை வழங்குவதற்க்காகத் தான் அந்த வழக்கறிஞர்கள் பயன்படுவார்கள்.

இத்தகைய குழு எத்தகைய முடிவுகளை தீர்மானிக்கும் என்பதை நாம்முன்னலேயே ஊகித்துணரலாம். ஆனாலும் இந்திப் பிரச்னை உண்டாக்கி யிருக்கும் கொந்தளிப்பை இக்குழு தணிக்குமென்று மிகவும் அதிகமாக எதிர்பார்க்கப்படுகிறது!

குத்தான் திராவிடர்கள் வேகமாக்த் துரத்தப் படுகின்றனர்!

இந்தப் பயங்கரமான நிலைமை, பொருளாதார ஏற்றத் தாழ்வின் காரணமாக ஏற்படுவதாகும். இத்தகைய பொருளாதார இன வேறுபாடுகளை உணராமல் அகில இந்தியக் கட்சிகளின் வலையில் விழுந்திருப்போர் அனைவரும் வட இந்திய ஆட்சியை ஜனநாயக ஆட்சி—மக்களாட்சி என்றெல்லாம் தம்பட்டம் அடித்துத் திரிகின்றனர்! ஜனநாயகம் என்கிற பேரால் வடவர்கள் தெற்கை அடக்கி ஒடுக்குவது தவிர என்ன நடக்கும்?

ஜனநாயகம் என்றால் என்ன? பெரும்பான்மையோர் ஆட்சி என்று பொருள்! ஒரே தன்மையான ஒரே இன மக்கள் வாழும் நாடுகளில் இக் கொள்கை நீதியானதாக இருக்கலாம். ஏனெனில் அத்தகைய நாடுகளில், இன்று பெரும்பான்மைக் கட்சியான ஒன்று, நாளை சிறுபான்மை ஆகிவிடும். சான்றாகப் பிரிட்டனைக் கூறலாம். இன்று கன்சர்வேடிவ் கட்சியார் ஆட்சி புரிவர்! நாளை, மிதவாதிகள் அதிகாரத்திற்கு வருவர்! இன்னொரு நாள் தொழிற் கட்சியார் பதவி ஏற்றிருப்பர்! எனவே, அங்கு பெரும்பான்மையும், சிறுபான்மையும் கொள்கையளவிலேதான்! கொள்கையோ காலதேச நிலைமைகளுக்கிணங்க மாறுதல் பெறும்.

இந்தியாவின் நிலை இத்தகையதல்ல. இங்கு பெரும்பான்மையும், சிறுபான்மையும் கொள்கை காரணம் பற்றியதாக இராமல் இனம், சமுதாயம் பற்றியதாகவே இருக்கும் இதற்குச் சான்றாக முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்தையும், இந்தியை ஆட்சி மொழி ஆக்கும் செயலையும் கூறலாம். இந்த இரண்டிலும் தென்னாட்டவன் கருத்தும், வடநாட்டவன் கருத்தும்—எந்தக் கட்சியானாக இருந்தாலும்—மாறுபடுகிறான்! எதனால்? இங்கு பெரும்பான்மை ஆட்சி ஆனால் கலப்பற்ற சர்வாதிகார—ஏகாதிபத்ய ஆட்சி என்று தான் பொருள்!

இதுவரையிலும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளாங் விளையும் விபரீதங்களைச் சிறிதளவு கூறினோம். இத்துடன் ஒரு சமூக இலக்கணம் என்கிற விஷயத்தை நடுவாக வைத்து, அவற்றைப் பேசும் மொழி ஆதியாக பொருளாதார நிலை இறுதியாக பத்து வகைப்படுத்தி நமக்குத் தெரிந்த வரையிலும் விளக்கியுள்ளோம்,

இந்த விளக்கங்களில் திராவிடர்கள் சார்பில் தமிழர்களின் பண்புகளையும், வடவர்களின் சார்பில் ஆரியரின் பண்புகளையும் பெரும்பாலும் எடுத்தாண்டிருப்பது தெரிய வரும். இனி, கன்னடர், தெலுங்கர், மலையாளர், துளுவர், ஆகியவர்களையும் விவரிக்க வேண்டும். எனவே, பத்துவிதப் பண்பாடுகளையும் இத்துடன் விடுத்து சமூக—சமுதாய விவரங்களை ஆராய்வோம். தொடரும்.

24-6-55 Page-No-14

கலை அரங்கம்

"நக்"

திரைப்பட உலகில் தமிழ்ப்படங்களின் நிலை!

திரைப்பட உலகில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்புவரை தமிழ்ப் படங்களுக்கும் படத் தயாரிப்பாளர்கள். நடிக—நடிகைகள் ஆகியோருக்குமிருந்து வந்த ஓரளவு புகழ் இன்று மறைந்துவரும் நிலைகண்டு நாம் வருந்துகிறோம். இதற்காக பழியை படத் தயாரிப்பாளர்கள் மீதுமட்டுமே சுமத்த சிலர் முற்படுகின்றனர். உண்மையை ஆராய்வோமானால் சில நடிகர்களும் கதை வசன கர்த்தாக்களும் தமிழ்ப் படங்களின் இன்றைய அவல நிலைக்கு முக்கிய காரணமாவார்கள்.

சமூக நலனுக்கு சிறிதுகூட பயனில்லாததும் இன்னும் சொல்லப்போனால் மனித குல ஒற்றுமைக்குக் கேடு பயக்கும் புராணக் கதைகளைப் படமாக்கி வந்த சகாப்தத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து தமிழ்ப்பட உலகிலேயே புத்துணர்வையும் பகுத்தறிவு வாடையையும் வீசச் செய்தவர் அறிஞர் அண்ணா அவர்களே யாகும்,

இதற்காக அண்ணா அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி சாதாரணமானதல்ல. வெறும் 'காபி' அடுத்து சிரமமில்லாமலேயே பட உலகில் நடமாட விரும்பியவரல்ல அண்ணா அவர்கள். இத்துறையில் உள்ள பல அறிஞர்களின் கருத்துக்களை எடுத்துக்காட்டாகக் கொண்டு தமது அறிவாற்றலையும் சிந்தனையையும் செலுத்தினார் அண்ணா. ஆகவேதான் தமிழ்ப் படத் துறையிலே அண்ணா அவர்களின் பாணி அல்லது தனிச் சிறப்பு என்ற ஒரு கட்டமும் அமைந்தது. அதனால் தாழ்ந்திருந்த சமுதாயத்திற்கும்—நாட்டுக்கும் விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. ஏன் தமிழ்ப்பட தயாரிப்பாளர்களும் நடிகர்களும் கூட பெருமிதமடைந்தனர். அண்ணா அவர்கள் காட்டிய இவ்வழியை மனமாச்சர்யமின்றி மற்றவர்கள் பின்பற்றியிருப்பார்களானால் திரைப்பட உலகில் தமிழ்ப் படங்கள் தலைநிமிர்ந்து மேலும் சிறப்படைந்திருக்கும்.

ஆனால் கதை அமைப்பாளர்களில் சிலர் தங்களின் சிந்தனைக்கு இடமளிக்காமல் அஸ்திவாரமற்ற புகழையே விரும்பி 'காபி' அடிக்கும் வித்தையில் தங்கள் கைத்திறமையைக் காட்ட முற்பட்டனர். இதனால் சமூகப் படங்கள் என்றாலே அலுத்துப்போகும் மந்த நிலையும், படத் தயாரிப்பாளர்கள் தங்களின் வருவாய்க் கேற்றதுபோல வேறு மார்கத்தைத் தேடுவதற்கான சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது.

உதாரணமாக அண்ணா அவர்களின் கருத்தோவியமான 'சொர்க்கவாசல்' படத்திலிருந்தும், ஏன் அதை சித்திரவதை செய்து உருவானதுமான கதைகள்—படங்கள் எத்தனை என்பதை அந்த 'பிரமாதப் பணி'யில் ஈடுபட்ட கதை அமைப்பாளர்கள்—வசன கர்த்தாக்கள் என்பவர்கள் ஒப்புக்கொள்ளாவிட்டாலும், ரசிகர்கள், படத்தயாரிப்பாளர்கள் இதன் உண்மையை நன்குஅறிவார்கள்.

இதைவிட விசித்திரம் என்னவென்றால் 'சொர்க்கவாசல்' கருத்திலிருந்து 'காபி' யடித்த படங்களைப் பார்த்து அவைகளையும் 'கத்தரிக்கோல்' துணையால் சின்னபின்னமாக்கி கதை என்ற பேரால் வெளிவந்த படங்களும் உண்டு.

இவ்வாறு நாம் கூறுவதால், ஒருவரின் கருத்தை அல்லது நடையைப் பின்பற்றுவது தவறு என்று யாரும் எண்ணிவிட வேண்டாம். அவ்வுயரிய கருத்தை வழிகாட்டியாக வைத்துத் தங்களின் சிந்தனைக்கும் கூடுமான அளவு வேலை கொடுத்தால் தமிழ் சமூகப் படங்கள் இன்றைய பரிதாப நிலைக்கு இலக்காகி யிருக்க முடியாது.

எனவே, தமிழ்சமூகப் படங்களுக்கான கதை—வசனம் அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளவர்களில் மேற்கண்ட குறைபாடுடையவர்கள் இனியாகிலும் தங்களின் தவறான—அல்லது அவசரப் போக்கிலிருந்து விடுபடுமாறு வேண்டிக் கொள்கிறோம். அதுதான் அவர்கள் சினிமாக் கலைத் துறையின் வாயிலாக நாட்டுக்கும், சமூக முன்னேற்றத்திற்கும் செய்யும் சிறந்த தொண்டாகும் என்பதையும் நாம் பணிவன்புடன் எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

தெலுங்குப் படங்களில் இந்த வருந்தத்தக்க நிலை பெரும்பாலும் இல்லையென்றே கூறலாம்.

அடுத்தபடியாக—நடிகர், நடிகைகளுக்கும் ஒரு வேண்டுகோளை விடுக்க எண்ணுகிறோம். இந்திப் படங்களில் நடிக்கும் நடிகர்கள்—தங்களின் புகழும் தரமும் உயர உயர அவர்கள் நடிக்கும் படங்களின் கதையமைப்பையும் பிறவற்றையும் கூர்ந்து கவனித்தே அதில் ஒப்பந்தம் செய்து கொள்ள முனைகின்றனர். அதாவது தாங்கள் வளர்ந்துள்ள நிலைக்குக் கீழானதாயிருப்பின் படத்தயாரிப்பாளர்கள் எவ்வளவு பொருள் கொடுத்தாலும் அதற்காக இணங்கி விடுவதில்லை.

ஆனால் தமிழ்ப்பட நடிக—நடிகைகளில் பெரும்பாலோர், இவ்வித முறையைப் பின்பற்றுவதில்லை.

பிரமாத நட்சத்திரங்களாகப் பிரகாசிக்கும் சில நடிகர்கள் பத்தாம் பசலிக் கதைகளைக் கொண்ட படங்களில் நடிப்பதை நாம் கண்டுதான் வருகிறோம்! இவ்விதம் நடிக்க முற்படும் நடிகர்களின் எண்ணந்தான் யாதோ அறியோம்.

உதாரணமாக தென்னாட்டு நடிகைகளில் மிகச் சிறந்தவரான தோழியர் அஞ்சலிதேவி அவர்கள் நடித்த தமிழ்ப்படமாகிய கணவனே கண்கண்ட தெய்வம் என்னும் படத்தைப் பார்த்ததில். அந்த அம்மையாருக்கு இப்படத்தில் நடிக்க எப்படித்தான் மனம் துணிந்ததோ என்று ஆச்சரியப்பட்டோம். சொர்க்கவாசல் படத்தில் புகழின் உச்ச நிலையை எட்டிப் பிடித்த அஞ்சலிதேவி—இவ்வளவு படுபாதாளத்தில் தடுமாறி வீழ்ந்திருப்பது வருந்தக் கூடியதாகும்.

கணவனே கண்கண்ட தெய்வம் என்னும் படத்தைத் தயாரித்தவர்கள் ஏராளமான பணத்தைச் செலவழித்திருக்கிறார்கள். சில காட்சிகளும் பாராட்டத் தக்கதுதான். ஆனால் அக்கதையை சாதாரண அறிவு பெற்றவர்கள்கூட அதிலும் இக்காலத்திற்கு ஏற்கக்கூடியதென்று ஒப்பமுடியாதல்லவா? போதாக்குறைக்கு தோழர் நாகையா அவர்களும் இதில் நடித்திருக்கிறார்!

அதுபோலவே பெண்ணரசி என்ற படத்தில் தோழியர் கண்ணாம்பா அவர்கள் நடிக்க இசைந்ததானது அவ்வம்மையாருக்குள்ள அழியாப் புகழுக்குச் சற்று களங்கமேற்படவே செய்கிறது. இதுபோன்ற இன்னும் பல சம்பவங்களை நாம் எடுத்துக்காட்ட முடியும்,

நிற்க, இந்தி நடிகர்களில் அளவு கடந்த புகழ் பெற்றவர்கள் கூட தங்களின் உடல் பருத்துத் தொங்கும் பிரச்னையில் கண்ணுங் கருத்துமாயிருந்து வருகின்றனர். உதாரணமாக திலிப்குமார், ராஜ்கபூர், தேவ்ஆனந்த், பிரேம்நாத். ஏன் அசோக் குமார் போன்ற நடிகர்களும் நர்கீஸ். மீனாகுமாரி, மதுபாலா, கீதாபலி, பீனாராய் போன்ற நடிகைகளும் வடநாட்டு சினிமாத் துறையில் முன்னணியில் நிற்பவர்களாவர். அதுபோலவே இவர்களின் பணவருவாயும் அதிகம். ஆயினும் இவர்களின் உடல் இதனால் பருத்துவிடவில்லை. பருத்துவிடவும் அவர்கள் விடுவதில்லை.

ஆனால் நம் தமிழ் நடிக—நடிகைகள் முக்கியமானவர்களில் சிலர் சிறிது புகழும்—மற்ற வசதியும் அமைந்தவுடன் உடல் பெருத்த மனிதர்களாகிவிடுகின்றனர். ஒருக்கால் இந்தக் கன்றுவியை அந்நடிக நடிகைகள் 'கிடைத்தற்கரிய பேறு' என்று கருதுகிறார்களோ அறியோம்! இதுபற்றியும் நமது தமிழ்ப்பட நடிகர்கள் தக்க கவனஞ் செலுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

நாம் சூசகமாகக் கூறும் இக்கருத்தை திரைப்பட ரசிகர்களும் சம்பந்தப்பட்ட நடிகர்களும் கூட மனமார வரவேற்பார்கள் என்றே நம்புகிறோம்.

அதுமட்டுமல்ல, நாம் இவ்வாறு எடுத்துக் காட்டுவதற்குக் காரணமும், தமிழ்ப் படங்கள் மற்ற படங்களை மிஞ்சுமளவுக்கு வெற்றியைத் தேடித்தர இயலாவிடினும் முன்பிருந்த புகழை அடியோடு ஒழித்துக் கட்டும் பாதையில் மேலும் நடைபோடுதல் கூடாது என்பதற்காகவேயன்றி வேறில்லை.

ஆகவே தமிழ்ப்படத் தயாரிப்பாளர்களும், நடிகர்களும். கதை—வசன கர்த்தாக்களும் படத்துறையில் சம்பந்தப்பட்டு பணியாற்றும் ஏனையோரும் நமது வேண்டுகோளை ஏற்று ஆவன செய்வார்களென்று எதிர்பார்க்கிறோம்.

—வீரன்.

மீர்சாகிப்பேட்டை, அழகிரி நாடக மன்றத்தாரின்

"அத்தான்"

(சமூக நாடகம்)

9—7—55, சனி மாலை 6-மணிக்கு எழும்பூர் மியூசியம் தியேட்டரில்
திரு. நாரணதுரைக்கண்ணன் அவர்கள் தலைமையில் நடைபெறும்
கதை வசனம்: எஸ். எஸ். தென்னரசு. பயிற்சி : ஏ. தன்ராஜ்

நடிகர்கள் : திருநாவு, டி. ஏ. வெங்கடாசலம், மு. புரட்சிமணி, சாரங்கன் வி. கன்னியப்பன், பெருமாள், சி. ஆர் பழனி, ஞானசேகரன், ஈ. மணி, உமார், வி. ராமச்சந்திரன், லோகநாதன், எத்திராசன் இராசாபாதர்
நடிகைகள்: மனோகரி, வி. சரசுவதி, ஆர் ஆண்டாள், ஜெயலட்சுமி

கட்டணம்: ரு, 2, 1, அணா 8. அமைப்பாளர் : வி. கன்னியப்பன்.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர், என். வி. நடராசன், சோழு அச்சகம் 18; ரிலேபள்ளி லைன் மில் டுகரு, சென்னை-1.